கம்பன் மணி மலர்

ருத்ரோத்காரி 1984



கம்பன் புகழ்பாடிக்
கன்னித் தமிழ் வளர்ப்போம்

1734/1

கம்பன் மணி மலர்

1984

263

ருத்ரோத்காரி பங்குனி 2உ முதல் 5உ வரை
1984 மார்ச் 15 முதல் 18 வரை நிகழ்ந்த

46-ஆவது கம்பன் திருநாள் வெளியீடு

கம்பன் கழகம், கம்பன் மணி மண்டபம், காரைக்குடி - 2.

உள்ளுரை

அடுத்த ஆண்டில் கம்பன் திருநாள்

		மகம்	பூரம்	உத்தரம்	அத்தம்
ரக்தாக்ஷி	பங்குனி	20	21	22	23
1985	ஏப்ரில்	2	3	4	5
		செவ்வாய்	புதன்	வியாழன்	வெள்ளி

சமர்ப்பணம்

கம்பன் ஓர் உலக மகாகவி; கவிச்சக்கரவர்த்தி. காப்பிய வானில் கதிரவனுய் நின்று ஒளிர்பவன். இவன் கல்லாத கலேயும் வேதக்கடலும் உலகில் இல்லே எனலாம். ஒன்பதாம் நூற்ருண்டில் வாழ்ந்தவன் நம் தந்தை பிரான் கம்பன்.

முத்தரையரிடமிருந்து தஞ்சைப் பகுதியை மீட்டுச் சோழப் பேரரசை நிறுவிய விஜயாலயன் காலத்தில் மிளிர்ந்தவன் கம்பன். விஜயாலயன் மகன், கோதண்டராமன் எனப் பெயர் சூடிக் கொண்ட ஆதித்தன் (கி.பி. 871-907) காலத்தில், அவனுல் பெரிதும் மதிக்கப்பெற்றவனுய் விளங்கியவன் கவிச்சக்கரவர்த்தி.

கம்பனே, பெற்ற தந்தையினும் பேணிக் காத்து நின்றவர் சடையப்ப வள்ளல். இன்று கதிராமங்கலம் என விளங்கும் வெண்ணெய்நல்லூர்தான் சடையப்பர் வாழ்ந்த வளநகர். கம்பனின் பல்துறைப் புலமையும், எல்லேயிலாக் கவிதா சன்னதமும் கற்ருேரையெல்லாம் ஈர்த்து நின்றன. முடியுடைத் தார்வேந்தர்களும், ரசிகப் பெருமக்களும், கம்பனேப் பெரிதும் மதித்துப் போற்றுவாராயினர்.

கம்பனின் போற்றற் பெரும்புலமைக்கு என்றும் கட்டியங் கூறிக்கொண்டு விளங்குவது அவன் அருளிய இராமாவதாரம் என்னும் இராம காதை! தமிழ் மொழியின் வளத்திற்கும், தமிழர் தலே நிமிர்வுக்கும், ஒப்பற்ற உதவியாய் நின்று நிலவுவது கம்ப ராமாயணம். தமிழ் மொழியின் தனிப்பெரும் காப்பியத்தை, எம்மப்பன் கம்பன், சடையன் பதியாம் வெண்ணெய் நல்லூரில் அரங்கேற்றினுன். மன்னர்களும், மறையோர்களும், ரசிகப் பெருமக்களும், அறம் பேணும் பொதுமக்களுமாக நிறைந்திருந்த கண்ணியம் நிறைந்த அவைக்களத்திலே அரங் கேற்றம் நடைபெற்றது. பவித்திரமான அக்காப்பியம் அரங்கேறிய புனித விழா ஒரு பெரும் திருவிழாவாக, "நாவலோ, நாவல்!" என்று நடந்திருக்க வேண்டும்.

சகாப்தம் 807; கலியாண்டு 3986-க்குச் சரியான விசுவாவசு-பங்குனி 4-ஆந் தேதி (கி. பி. 886 பெப்ருவரி-22) புதன்கிழமை அத்த நட்சத்திரமே இராமாவதாரம் அரங்கேறிய பெருநாள், அன்றுதான் நம்முடையவன் கம்பனே, "கவிச்சக்கரவர்த்தி" என்று அறிவுடை யுலகம் மனமாரப் பாராட்டி விருதளித்து மகிழ்ந்தது.

கம்பன் பிறந்த நாளே நாமறிய எவ்வகைச் சான்றுகளும் நமக்குக் கிடைக்கவில்லே. ஆனுல், "கவிச்சக்கரவர்த்தி" பிறந்த நாளே நாம் நன்கறிவோம். பங்குனி-அத்த நாளில் தானே "கவிச்சக்கரவர்த்தி" பிறந்தான்! எனவே, இராமாவதாரம் அரங்கேறியதும் "கவிச்சக்கரவர்த்தி" என்று விருதுப்பெயரைக் கம்பன் ஏற்றருளியதுமான அந்தப் பங்குனி அத்த நாளேயே கம்பன் திருநாளாக-ஜன்ம நட்சத்திரமாக--ஏற்று, விழா எடுத்து வருகிருேம். மகம், பூரம், உத்தரம் ஆகிய முதல் மூன்று நாள்களில் காரைக்குடியில் உள்ள கம்பன் மணிமண்டபத்திலும், பங்குனி அத்த நாளில் நாட்டரசன் கோட்டையில் கவிச்சக்கரவர்த்தி

சமாதி கொண்டு எழுந்தருளி அருள் சுரக்கும் கம்பன் பள்ளிபடை திருக்கோயிலிலும், தூய இலக்கியப் பெருவிழாவாகக் கொண்டாடி மகிழ்கிறது கம்பன் கழகம்.

இவ்விழா எவ்விதமான சாதி, சமய, மொழி, கட்சி, பால் வேறுபாடின்றி யாரும் கலந்து மகிழும் அருமையுடையதாகும். புலவர்களும், கலைஞர்களும், கவிஞர்களும், திறனுய்வாளர் களும், ரசிகர்களுமாக ஆயிரக்கணக்கானவர்கள் ஆண்டுதோறும் வந்து கலந்து கம்பன் புகழ் பாடியும், கம்பன் புகழ் பருகியும் பெருமை செய்கின்றனர்.

பேராசிரியர் இரா. இராதாகிருஷ்ணன் அவர்கள் பல ஆண்டுகளாகக் கம்பன் கழகத்தின் உறுப்பினராக இருந்து சா. கணேசன் அவர்களுக்குத் துணையாய் நின்று விழாக்களை நடத்திக் கொண்டு வந்திருக்கின்ருர்கள். கம்பன் அடிப்பொடியைப் போலவே இராதாகிருஷ்ணன் அவர்களும் தம் வாழ்நாள் முழுவதும் தமிழ் அன்னைக்கும், ஆன்மீகத்துறைக்கும், சிறப்பாகக் கம்பனுக்கும் அயராது தொண்டாற்றினுர்கள்.

தமிழ்க் கடல் மணி பேராசிரியர் இரா. இராதாகிருஷ்ணன் அவர்களுடைய தளராத உழைப்பால் தமிழ் உலகிலும், ஆசிரியர் உலகிலும், மாணவர் உலகிலும், இலக்கிய உலகிலும் உள்ளவர்கள் அத்துணைப்பேரும் அடைந்த பலனை அளவிட முடியாது. கம்பன் காப்பியமல் லாமல் மற்ற தமிழ் இலக்கியங்களும் மக்களிடையே. பேராசிரியருடைய பேச்சுத் திறமையால் உயர்வடைந்துள்ளன.

அவருக்கே உரிய பாணியில் சொற் பொழிவுகளையும், பட்டி மண்டபங்களையும் மிகத்திறம் படச் செய்து வந்தார். புலவர்கள் சாதாரணமான பாடல்கள் என்று கருதும் பாடல்களிலும் இராதாகிருஷ்ணன் அவர்கள் நுண்மையான கருத்துக்களைக் காணும் நயம் படைத்த பேச்சாளர். பல இளைஞர்களை முன்னணிப் பேச்சாளர்களாகவும், தன்னைப் போலவே ஆழ்ந்த சிந்தனை யோடும், கருத்தோடும் திறம்பட வாதிக்கவும் படைத்துள்ளார்கள். தமிழ் இலக்கியம் மட்டும் அல்லாமல் ஆங்கில இலக்கியங்களிலும் புலமை பெற்றவர் என்பதைக் கம்பன் உலகம் அறியும். அன்பிற்குரிய அவரது மறைவால் கம்பன் கழகமும், தமிழ் நாடும், கம்பன் உலகமும் ஈடு செய்யமுடியாத பேரிழப்பை அடைந்துவிட்டது. அவரது நினைவாக இந்த ஆண்டு மலரை நன்றியுடன் சமர்ப்பிக்கின்ரேம்.

மலர் எல்லா வகையிலும் அழகுடன் வெளிவருவதற்கு விளம்பரங்கள் அளித்தும், கருத்துச்செறிவுள்ள கட்டுரைகள் அளித்தும் உதவிய அனைத்துப் பேருக்கும் பணிவார்ந்த வணக்கத்தையும், நன்றியையும் செலுத்திக்கொள்கிரேம்.

இம்மலரை மிக்க சிரத்தையுடன் அச்சிட்டு உதவிய மதுரை எக்ஸ்போ அச்சகத்தார்க்கு எங்கள் நன்றி உரியதாகும்.

கம்பன் மணி மண்டபம்,
காரைக்குடி - 623 002.
15 மார்ச் 1984

அன்பும் பணிவுமுள்ள,
ஜி. கே. சுந்தரம்
தலைவர், கம்பன் கழகம்.

கூடிப் பாடுவோம்;
குளிரப் பருகுவோம்.

'வசதியுள்ளவர்களால் தான் பண உதவி செய்து புண்ணியம் செய்ய முடியும். நாம் என்ன செய்யலாம்?' என்று மற்றவர்கள் எண்ணக் கூடாது. சரீரத்தால் மற்றவர்களுக்குக் கைங்கர்யம் செய்வது பெரிய புண்ணியம். ஒவ்வொருத்தரும் பிறருக்குக்கூட தெரிய வேண்டாம் — ஏதோ ஓர் ஒற்றையடிப் பாதைக்குப் போய் அங்கே உள்ள முள்ளை, கண்ணாடியை அப்புறப்படுத்தி வந்தால் போதும். அது சித்த சுத்திக்குப் பெரிய உதவி என்று சொல்லுவார்கள் காஞ்சிப் பெரியவர்கள்.

இதைக் கம்பனடியார்களும், அடிப்பொடியின் அன்பர்களும் அப்படியே செயல் படுத்திக் காண்பித்த விதம், இப்போது நினைத்தாலும், எங்களை மெய் சிலிர்க்க வைக்கிறது; ஆம். சென்ற ஆண்டு, கம்பன் அடிப்பொடி அமரரான பிறகு நடந்த முதல் விழாவிற்கு அன்பர்கள் யாவரும் ஊர், இனம், தொழில் பாகுபாடு இன்றிக் கூடியிருந்து குளிர்ந்து வடம் பிடிப்போம் வாருங்கள் என்று வேண்டினோம். அப்படியே எல்லா ஊரார், இனத்தார், தொழிலார் யாவரும் திரண்டு வந்து தங்கள் தங்களால் ஆன எல்லா விதத்திலும் உதவி, ஊர் கூடித் தேர் இழுத்தார்கள். அடிப்பொடி அவர்கள் இருந்திருந்தால் எப்படி எல்லாம் எண்ணி எண்ணித் திட்டம் போட்டு செம்மையாக, நிமிஷம் பிசகாமல் விழா நடத்தியிருப்பார்களோ, அதற்கு எவ்விதப் பங்கமும் வராது சிறப்பித்து விட்டார்கள்.

இது எப்படி சாத்தியமாயிற்று? அலகிலா விளையாட்டுடைய அவன் திருவருளும் கம்பன் கருணையும், அன்பர் ஆதரவுமே சாதித்தவையாகும். அன்பர் ஒவ்வொருவரும் தம்மால் முடிந்த விதமெல்லாம் கம்பன் புகழ் உரைத்தோ, கவி புனைந்தோ, இசை பாடியோ, வந்தவர் பசியாரச் செய்தோ, வாகனமோட்டியோ, ஒலியமைத்தோ, ஒளிகூட்டியோ, மண்டபமலங்கரித்தோ, விழா மலருக்கு விளம்பரம் நல்கியோ — இன்ன விதம் என்றில்லாமல் தத்தம் பங்கைச் செவ்வனே செய்தனர். இவ்வாண்டும் இம் மூன்றையும் நம்பியே நாற்பத்து ஆறும் ஆண்டுக் கம்பன் திருநாளை நல்ல முறையில் நடத்திடவும். அதனையொட்டிய இம் மணி மலர் வெளியீட்டை மணியாரமாய் படைத்திடவும் எண்ணியுள்ளோம்.

கம்பன் அடிப்பொடியின்பால் பின்னிக் கிடக்கும் பேரன்பால் எங்களோடு நித்தம் நின்று பணி புரிந்து பூரிக்கும் அன்பர் யாவருடைய பாதமலர்களிலும் எங்கள் சென்னித் தலைப் பதித்துப் பணிந்து வாழ்த்தி மகிழ்கிறோம். என்றும் வேண்டும் இந்தக் குன்றா இன்ப அன்பு.

கம்பன் புகழ் பாடக் கூடுவோம் தொடர்ந்து; கம்பன் புகழ் பருகிக் குளிர்வோம் என்றும்.

கம்பன் கழகம்,
கம்பன் மணி மண்டபம்,
காரைக்குடி.
15–3–84.

கம்பன் பணியில் உங்கள்,
மு. மெ. முத்துராமன்
பழ. பழநியப்பன்
செயலாளர்கள்.

கம்பன் கழகத்தின் நடப்பு ஆண்டு உறுப்பினர்கள் ;

தலைவர் :

திரு. ஜி. கே. சுந்தரம்.

உப தலைவர் :

திரு. க. கு. கோதண்டராமன்.

செயலாளர்கள் :

திருவாளர்

மு. மெ. முத்துராமன், பழ. பழநியப்பன்

உதவிச் செயலாளர் :

திரு. ச. கம்பராமன்

பொருளாளர் :

திரு. அள. திருநாவுக்கரசு.

உறுப்பினர்கள் :

திருவாளர்கள்

1. மெ. செ. மெ. மெ. சொக்கலிங்கம் செட்டியார், காரைக்குடி
2. சா. நா. அ. சொ. அ. அண்ணாமலை செட்டியார், காரைக்குடி.
3. என். ஏ. மாரிமுத்து பிள்ளை, காரைக்குடி.
4. ராம. கண்ணப்பன், நாட்டரசன்கோட்டை.
5. மு. சிதம்பரம், காரைக்குடி
6. எம் எஸ்.சுந்தரம் பிள்ளை, பாளையங்கோட்டை.
7. ஆர். கே. சுப்பிரமணியன், காரைக்குடி.
8. ந. கோவிந்தசாமி, புதுவை.
9. பெ. மு சுப்பையா செட்டியார், ஆத்தங்குடி.
10. பழ. சண்முகம், காரைக்குடி.
11. நா. மெய்யப்பன், காரைக்குடி.
12. அரு. நாகப்பன், ஒ. சிறுவயல்.
13. அள. சுப்பையா, காரைக்குடி.
14. அள. வீரப்பன், காரைக்குடி.
15. ராம. தெ. முருகப்பன், காரைக்குடி
16. ப. மு. சித. பழநியப்பன், காரைக்குடி.
17. எஸ். ஏகப்பன், நாட்டரசன்கோட்டை.
18. ராம சொக்கலிங்கம், காரைக்குடி.
19. ப. சு. ராம. அண்ணாமலை செட்டியார் காரைக்குடி.
20. பழ. முத்தையா, காரைக்குடி.
21. அரு. ராம. முத்துராமன், காரைக்குடி.
22. ராம. மீனாட்சிசுந்தரம், காரைக்குடி.
23. சுப. சித. சுப்பிரமணியன், காரைக்குடி
24. எஸ். தனகோடி, காரைக்குடி.
25. ஜீ. செல்வகணபதி, அழகப்பாபுரம்.
26. ஆர். பாபநாசம், அழகப்பாபுரம்.
27. என். எம். ஜனார்த்தனம், அழகப்பாபுரம்.
28. சா. நா. நாராயணன், காரைக்குடி.
29. மரு. சு. மாணிக்கவேல் செட்டியார், காரைக்குடி.
30. வெ. பழநியப்பன், காரைக்குடி.
31. வீர. முருகப்பன், காரைக்குடி.
32. எஸ். முனுசாமி, காரைக்குடி
33. அரு. லெட்சுமணன், காரைக்குடி.
34. நா. பழனியப்பன், காரைக்குடி.
35. லெ. கணேசன், காரைக்குடி.
36. கலைமகள் ராமனாதன், கோவை.
37. மெ. காந்தி, காரைக்குடி.
38. எஸ். சிவலிங்கம், காரைக்குடி.
39. நா. நஞ்சண்டன், கோவை.
40. சரசுவதி இராமநாதன், பள்ளத்தூர்.
41. அ. கிருஷ்ணசாமி, கோவை
42. க மீ. வேங்கடேசன், கோவை.
43. அ. அருணகிரி, புதுவை.
44. எஸ். இராமகிருஷ்ணன், மதுரை.
45. எஸ். கே. இராமராசன், வேலூர்.
46. வை. கண்ணுச்சாமி, தஞ்சை.
47. சித. ஆத்தப்பன், திருச்சி.
48. பி. மூக்கையா ஆசாரி, காரைக்குடி.

கம்பன் கழகங்கள் - முகவரியுடன்

1. கம்பன் கழகம்,
கம்பன் மணி மண்டபம்,
காரைக்குடி-623 002.
தொலைபேசி : 2600

2. கம்பன் கழகம்,
கம்பன் அருட்கோயில்,
நாட்டரசன்கோட்டை
623 556.

3. கம்பன் கழகம்,
கீழ வீதி,
தேரழுந்தூர்-609 808
மாயூரம் வழி

4. கம்பன் கழகம்,
சீராம விண்ணகரம்,
கள்ளிப்பட்டி-638 505
தொலைபேசி : 44 (கோபி)

5. கம்பன் கழகம்,
நாமக்கல்-637 001.
சேலம் மாவட்டம்.

6. கம்பன் கழகம்,
சீதா கல்யாண மண்டபம்,
கோபிச்செட்டிப்பாளையம்-
638 452.
தொலைபேசி எண்: 84

7. கம்பன் கழகம்,
116, முத்துமாரியம்மன் கோயில் தெரு,
புதுச்சேரி-605 001.
தொலைபேசி : 509

8. கம்பன் கழகம்,
10, பெரிய அக்ரகாரம்,
ராசிபுரம்-637 408.
சேலம் மாவட்டம்.

9. கம்பன் கழகம்,
மணி பீடர் பள்ளி,
கோயம்புத்தூர்-641 037
தொலைபேசி: 35851

10. கம்பன் கழகம்,
4-பி, சாலை ரோடு,
சேலம்-636 001.
தொலைபேசி : 3501.

11. கம்பன் கழகம்,
கற்பகச் சோலை,
1, வெள்ளையன் செட்டியார் வீதி,
கோட்டூர்புரம்,
சென்னை 600 085
தொலைபேசி : 411110.

12. கம்பன் கழகம்,
சித்ரா ஜவுளி ஸ்டோர்ஸ்,
புதுக்கோட்டை-622 001.
தொலைபேசி : 560.

13. நெல்லை மாவட்டக் கம்பன் கழகம்,
கம்பராமாயண மண்டபம்,
1, பெருமாள் தெற்கு மாட வீதி,
பாளையங்கோட்டை-627 002.

14. மலேசியா கம்பன் கழகம்,
64, Jalan Hang Jebot,
Malacca.
(Malaysia)
Phone: 23206

15. கம்பன் கழகம்,
120, காந்தி சாலை,
திருவாரூர்-610 108.

16. கம்பன் கழகம்,
அன்பு நிலையம்,
பெரிய தெரு,
பட்டுக்கோட்டை-614 601
தொலைபேசி : 102.

17. கம்பன் கழகம்,
62, காமராஜ் சாலை,
திருப்பத்தூர்-635 601.
வட ஆர்காடு மாவட்டம்,
தொலைபேசி : 29026.

18. கம்பன் கழகம்,
1, மாணிக்கம் பிள்ளை தெரு
சிவகெங்கை-623 560.

19. கம்பன் கழகம்,
2/370 அய்யாத்துரை தெரு
பரமக்குடி-623 707.

20, கம்பன் கழகம்,
13, இ. பி. காலனி,
காந்தி நகர்,
வேலூர்-632 006.
வட ஆர்காடு மாவட்டம்.

21. கம்பன் கழகம்,
8, சிங்கார முதலி தெரு,
நல்லியக்கோடன் நகர்,
திண்டிவனம்-604 002.

22. கம்பன் கழகம்,
22, ஞானதிக்கம் பிள்ளை தெரு,
கல்லுக்குழி,
திருச்சி-620 020.

23. கம்பன் கழகம்,
பச்சையப்பன் மேநிலைப்பள்ளி கடடடம்
காஞ்சிபுரம்-631 501.
தொலைபேசி : 2487.

24. கம்பன் கழகம்,
தியாசாபிகல் சொஸைட்டி,
தஞ்சாவூர்-613 001.

25. கம்பன் கழகம்,
98, அறிஞர் அண்ணா நகர்,
மதுரை-625 020.
தொலைபேசி : 32827.

26. கம்பன் கழகம்,
அவிநாசி-638 654.

27. கம்பன் கழகம்,
C/o. நியு சீதாராம விலாஸ்
கடை வீதி,
கவுந்தப்பாடி-638 455
வழி ஈரோடு. R M S.

28. கம்பன் கழகம்,
23, காமராஜர் ரோடு,
பொள்ளாச்சி-642 002.

29. கம்பன் கழகம்,
23, 24, அன்னதான விநாயகர்
கோவில் தெரு,
பேட்டை,
திருநெல்வேலி-627 004.

30. கம்பன் கழகம்,
5, சந்நிதித் தெரு,
தென்திருப்பேரை-623 623
திருநெல்வேலி மாவட்டம்.

31. கம்பன் கழகம்,
வாழியூர்-623 315.
ஒண்ணுபுரம் வழி,
வட ஆர்க்காடு மாவட்டம்.

32. கம்பன் கழகம்,
திண்ணப்பா திரையரங்கம்,
சேலம் சாலை,
கரூர்-639 002.
தொலைபேசி : 747.

33. கம்பன் கழகம்,
4-A, Dr. Sarat Banerjee Rd
Calcutta-700 029.

34. கம்பன் கழகம்,
68, இராசாராம் தெரு,
சவகர் நகர்,
திருமங்கலம்-626 706.

35. கம்பன் கழகம்,
6, பேராசிரியர் குடியிருப்பு
கிழக்கு தாம்பரம்-600 059.
தொலைபேசி: 48581.

36. கம்பன் கழகம்,
57, பஜார் தெரு,
பெரம்பலூர்-621 212.

37. கம்பன் கழகம்,
மேலரத வீதி,
நாட்டரசன்கோட்டை-
623 556.

38. கம்பன் கழகம்,
10, கர்ண கொல்லை அக்ரஹாரம்,
கும்பகோணம்-612 001.

39. கம்பன் கழகம்,
ஆலப்பட்டிநல்லூர்-627 853.
தென்காசி வட்டம்,
நெல்லை மாவட்டம்.

40. கம்பன் கழகம்,
9, வர்த்தகர் தெரு,
ராமேஸ்வரம்-623 526.
தொலைபேசி : 24.

41. கம்பன் கழகம்,
''சோலை''
6, தண்டல் கந்தசாமி தெரு,
ராஜபாளையம்-626 117.

42. கம்பன் கழகம்,
கலா தனிப்பயிற்சிக் கல்லூரி
சேரிங் கிராஸ்,
உதக மண்டலம்-643 001.

43. அகில இலங்கைக் கம்பன் கழகம்,
108, அரசடி ரோடு,
கந்தர் மடம்,
யாழ்ப்பாணம். Srilanka

44. கம்பன் கழகம்,
பி, 11, சந்தன மர வீதி,
வட்டம்-9,
நெய்வேலி-607 801.

45. கம்பன் கழகம்,
வையப்ப மலை,
திருச்செங்கோடு வட்டம்,
சேலம் மாவட்டம்-637 410

46. கம்பன் கழகம்,
90, மருத்துவமனைத் தெரு,
திருத்துறைப்பூண்டி
614 713
தஞ்சை மாவட்டம்.

47. கம்பன் கழகம்,
7, சி. எச். பி. காலனி 5வது தெரு,
திருச்செங்கோடு-637 211.
சேலம் மாவட்டம்.

48. கம்பன் கழகம்,
கற்பகம் உணவு விடுதி
மேல் மாடி,
பெங்களூர் சாலை.
கிருட்டிணகிரி-635 001.

49 கன்னியாகுமரி மாவட்டக் கம்பன் கழகம்
9, ஏ, ஆசாரிமார் வடக்குத் தெரு,
நாகர்கோவில்-629 001.

கம்பனின் குறிக்கோள்

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

கம்பனின் இராம காதை, ஏன் பிறந்தது? கடவுளர் வெற்றிகளை புராண பாணியில் புகழ்ந்து பாடவா? இல்லை! கம்பனே விடை தருகின்றான்: மானுடம் வென்றதம்மா என்று! ஆம்! மானுடம் வெற்றி பெற வேண்டும். இன்றைய மானுடம் வெற்றி பெறும் நிலையிலா வாழ்கிறது! இல்லையே! வெற்றிக்குத் துணை செய்யக்கூடிய எந்தப் பண்புகளையும் இன்றைய மானுடம் ஒழுக்கமாக எடுத்துக்கொள்ள வில்லையே! கம்பனின் இராமன் - மானுடன் வெற்றி பெற்றான்! எப்படி?

மனிதனுக்கு இன்ப துன்பங்களில் பிறழ்வு இல்லாத உள்ளம் தேவை! இன்பம் என்றால் ஆகா என்று ஆனந்தக் கூத்தாடுவதும் துன்பம் என்றால் துவண்டு வீழ்ந்து அழுது புலம்புவதும் கூடாது! அயோத்திப் பேரரசை ஏற்கும் செய்தியும், பேரரசை இழந்து காட்டுக்குச் செல்லும் செய்தியும் இராமனுக்கு ஒரே செய்தி போலத் தான் விளங்கின! அது மட்டுமல்ல. பரதன் அரசேற்பதிலும் அவனுக்குக் கொள்ளை மகிழ்வு! தான் பெற்றது போலவே எண்ணி மகிழ்கின்றான்! இது அதிகாரம், செல்வம் ஆகியவைகளால் ஏற்படக் கூடிய உணர்வுச் சிதறல்களை வென்று விளங்கிய காட்சி! மானுடம் வெற்றி பெற்ற முதற்காட்சி! ஆனால், இன்றைய மானுடம் சந்தி சிரிக்கிறது! எங்கு பார்த்தாலும் அதிகாரப் போட்டிகள்! செல்வப் பங்கீட்டுச் சண்டைகள்! இன்றைய மானுடம் நோய்வாய்ப் பட்டுக் கிடக்கிறது! மீண்டும் மானுடம் வெற்றி பெற வேண்டுமானால் இந்தப் பண்பாடு தேவை!

மானுட அமைப்பில் பகை, தவிர்க்க இயலாதது! ஆனால் பகைவனை வெறுக்கக் கூடாது. இராமனுக்கும் இராவணனுக்கும் பகை வந்து விட்டது! இராவணன், இராமனைப் பகைவன் என்ற ஒரே காரணத்திற்காகப் பழி தூற்றவில்லை! ''நல்லதோர் பகை'' என்று பாராட்டுகின்றான்! இந்தப் பண்பு, மானுடம் வெற்றி பெற்ற பண்பு! இன்றோ நண்பர் - பகைவர் என்று இனம் கண்டு கொள்ள முடியாத அளவுக்கு நண்பர்கள் பகைவர்களாகின்றனர்! பழி தூற்றுகின்றனர்! இது மானுடத் தன்மையல்ல! இதனால் வெற்றியும்பெற இயலாது! பகைவனையும் பாராட்டும் பண்பே மானுடம் வெற்றி பெறும் பண்பு.

இராம-இராவண யுத்தம் தவிர்க்க முடியாததாகி விட்டது! போர் நடைபெறுகிறது! இராவணன் தோற்கிறான்! போர்க் கருவிகளை இழந்தும் துணைவர்களை இழந்தும் இராவணன் தனியனாக நிற்கிறான்! இந்த நிலையில் இராமன், இராவணனைப் பகைமை உணர்வில் அழித்து விடாமல் ''இன்று போய் நாளை வா'' என்று கூறுகிறான்! இது மானுடம் வென்ற காட்சி! ஆனால் இன்றோ, ஒருவரை ஒருவர் அழித்துக் கொள்ளவே விரும்புகின்றனர்! இதனால் மானுடம் துன்பச் சூழலிலேயே வீழ்ந்து அல்லற்படுகிறது! மீண்டும் மானுடம் வெற்றி பெற வேண்டுமானால் பகைவனை அழித்துவிட வேண்டும் என்ற குணம் கூடாது!

இன்றைய சூழ்நிலையில் மானுடம் அழியத் தக்க துன்பத்துள் சிக்கிச் சீரழிவதை உடனடியாகத் தவிர்த்திடுதல் வேண்டும். அதிகார அமைப்புடைய அரசுகள் தொண்டின் மையங்களாக மாற்றம் பெற வேண்டும்! அதிகார அமைப்புக்களாக அரசுகள் விளங்கும் வரையில் அதிகாரப் போட்டி இருக்கும். செல்வம், பொதுமையாக்கப் பெற்றால் செல்வப் போட்டியும் குறைந்து விடும்! பகைவனையும் அழிக்க நினைக்காத மாண்பும் தேவை! இதுவே மானுடம் வெற்றி பெறும் விதி! மானுடம் வெற்றி பெற வேண்டும். இதுவே கம்பனின் குறிக்கோள்!.

இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன?

டாக்டர் சரசுவதி இராமநாதன், எம். ஏ., பி எச். டி.,

''வெல்லும் சொல்'' இல்லாத சொல்லேப் பேசுவது பெரிய, அரிய கலே. சொலல் வல்லன், சோர்விலன், அஞ்சான் அவனே இகல் வெல்லல் இயலாது அல்லவா? கூனியின் சொல்லாற்றல் பாற்கடலனேய கைகேயி உள்ளத்தில் பிறை கடையிட்டதன்றோ? வஞ்சமகள் சூர்ப்பனகை யின் வாய்ச்சாலம் வாரணம் பொருத மார்பனே வலேப்படுத்தி அழிவுக்கே அழைத்துச் சென்ற தல்லவா? இவை எல்லாம் தீப்பயன் தந்த சொல்லாற்றல்கள். அனுமனின் சொல்லாற்ற லோ அல்லற்பட்டவர்களுக்கெல்லாம் அமுத மழையாய் இனிமை தந்தது! அங்கதனின் அறி வாற்றலும் சொல்லாற்றலும் பெற்றுத் திகழ் வதைப் பின்வரும் காட்சியால் கம்பன் காட்டுகிருன்.

ஓடின வானரப் படை

மூல பல சேனேயைத் தசமுகன் திரட்டிச் சேர்த்து அனுப்புகிருன். ஓர் அரக்கனேக் கொல்லவே ஆயிரம் இராமர் வேண்டுமாம். அதிலும் இருபத்திநான்கு ஆண்டுகள் ஆகுமாம். இது வானரங்களின் கணிப்பு. இந்த நினேப்பு வந்தபின் ''வானரங்கள் சில அணேமேல் ஓடின; சில கடலேக் கடக்கத் தெப்பக் கட்டை தேடின; சில மலே முழைகளில் ஒளிந்தன.'' என்று வானாங்களின் அச்சமிகுந்த நிலேயைக் காட்டு கிருன் கம்பன். இந்த அரக்கர்கள்

''அறத்தைத் தின்று, அருங் கருணேயைப் பருகி''
''மறத்தைப் பூண்டு, வெம்பாவத்தைப் புணர்''கின்றவர்.

இவர்களுக்கு அஞ்சி வானரங்கள் ஓடி ஒளியும் காட்சி அற்புதக் கண்காட்சியாகிறது.

இரிந்தோடும் வானர சேனேயைப் பயம் தெளிவித்து அழைத்து வருமாறு அங்கதனுக்குப் பணிக்கிருர் இராமர். அங்கதன் விரைந்தோடி, ''எங்கெங்கோ அலேந்து கெடுகிறீர்களே!' என்று ஆத்திரமாய் அழைத்தவன், பின் சமா தானமாக, 'நான் சொல்வதைக் கேளுங்கள்; கேட்டபின் போகவேண்டுமென்று தோன்றினுல் போய்விடுங்கள்!'' என்கிருன்.

அந்த வானரங்களின் தலேவர்கள் சிலர் வந்து நின்று 'நீ இந்த அரக்கர்களேப் பார்க்க வில்லேயா? நாங்கள் வீணுக இறந்து போய்ச் செய்யப்போவது என்ன?' என்று கேட்கின்ற னர்.

''இந்திரசித்து செய்த மாயப் போரை மறந்துவிட்டாயா? இனி அந்த அரக்கரைக் கடக்கக் குரங்குப் படையும் மானுடர் இருவரும் போதுமா? அது கிடக்கட்டும்! எழுபது வெள்ளம் வானரப் படை ஒரு அரக்கனுடைய உணவுக்குப் போதுமா? கும்பகர்ணன் ஆற்றிய அருமைப் போரை நினேத்துப் பார்த்தாயில்லே. 'நம்பி' உனக்கு மறதியா? அறியாமையா? அனுமன், சுக்ரீவன், இராம, இலக்குவர் ஆற்றலெல்லாம் அவரவர் உயிர் தாங்கவும் போதாது போலிருக் கிறதே! நமக்கென்ன வந்தது! கனியும் காய்க ளும் உண்ணக் கிடைக்கும் மலேயில் சுகமாக நாம் இருப்போம்! உலகத்தை இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன? என விரக்தியாகப் பேசுகின்றனர் வானர வீரர்.

''அனுமன் ஆற்றலும், அரசனது ஆற்றலும், இருவர்
தனுவின் ஆற்றலும், தம்உயிர் தாங்கவும் சாலா;
கனியும் காய்களும் உணவுள; முழையுள கரக்க;
மனிதர் ஆளின் என், இராக்கதர் ஆளின்என் வையம்!''
(6:30:43)

''அரசியல் வேதாந்தி''களாக உபதேசம் செய்கிறார்கள் இந்த வானர வீரர்! ''நாங்கள் இருந்தால்தான் எங்கள் கிளை வாழும். எங்களுக்கு விடை கொடுத்தனுப்பு. சாக அனுப்பாதே'' என்பது இவர்களின் விண்ணப்பம்! எவ்வளவு தளர்ச்சி! எவ்வளவு அச்சம்!

யாருக்கு யார் உதவி

இதில் ஒரு வேடிக்கை பாருங்கள்! வானரர் யாவர்? வானவர்தாமே! இந்த வானவருக்கு உதவத்தானே திருமால் இராமனாக அவதரித்துள்ளான். 'கொலைத் தொழில் அரக்கர்தம் கொடுமை தீர்ப்பன்' என்று உரைத்த வாய்மை காக்கத்தானே இந்தப் பாடு படுகிறான். அவனுக்கு உதவாமல் உயிர்பிழைக்க ஓட நினைக்கின்றனரே இந்த வானர(வ)ர்.

ஜாம்பவானே! நீயுமா?

சாம்பனை (ஜாம்பவானை) நோக்கி, ''அறிவு சான்றவனே! திருமாலே இராமன் என்று சொல்லி எம்மைத் தேற்றிய நீயே இப்படி இருக்கலாமா? எமன் வாயில் சிக்கிக் கொண்டாலும் வீரம் குறையலாமா?

'தஞ்சம் என்றணைந்த வீரர் தனிமையில் சாதல் நன்றோ?' என்கிறான். தன் தகப்பன் வாலி என்றுகூடச் சொல்லாமல், ''வானவர் கடைய முடியாத பாற்கடலைக் கடைந்த வாலியை இராமன் ஒற்றையம்பால் கொல்லவில்லையா? அறத்தைப் பாவம் வெல்லுமா? நீயுமா ஓடப்பார்க்கிறாய்?'' என்று கொஞ்சம் காரமாகவே கேட்கிறான்!

நாணத்தால் சிறிது நேரம் பேசாதிருக்கும் சாம்பன் பேசுகிறான். ''குரங்குகளைக் குற்றம் சொல்லாதே! காலநேமியையும் கண்டேன்; இரணியன் தனையும் கண்டேன்! ஆலமா விடமும் கண்டேன்; மதுவினை அனுசனோடும் வேலையைக் கலக்கக் கண்டேன்; இப்படிப் பலரது வலிமை கண்ட நானே நடுங்குகிறேனே, நீ அறியாப் பிள்ளை யாதலால் தான் இப்படிப் பேசுகிறாய் என்று கூறி வருகின்றவன்,

''ஆனாலும் ஓடுவது அழகில்லைதான். பழிதான். நரகத் துன்பம் தருவதுதான். ஆனால் இனிமேல் மேகமேயனைய இராமன் முகத்தில் எப்படி விழிப்போம்!'' என்று வெட்கப்படுகிறான்!

சிந்தனையைத்தூண்டத்தான் ...

இத்தகைய சிந்தனையைத் தூண்டத்தானே அங்கதன் சாம்பனிடம் பேச ஆரம்பித்தான். அவன் நினைத்தது நடந்துவிடுகிறது! உடனே அங்கதன்,

''எடுத்தலும் சாய்தல்தானும்,
எதிர்த்தலும் எதிர்ந்தோர்தம்மைப்
படுத்தலும், வீரவாழ்க்கை
பற்றினர்க்குவுற்ற, மேல்நாள்''

என்று கூறித் தோல்வி தோல்வியன்று; தோல்வியை ஒப்புக்கொண்டு ஓடித் தளரும் தளர்ச்சிதான் தோல்வி என்று எடுத்துக் காட்டுகிறான்.

''ஒன்றும்நீர் அஞ்சல்; ஐய!
யாமெலாம் ஒருங்கே சென்று
நினறும்ஒன்று இயற்றல் ஆற்றேம்;
நேமியான் தானே நேர்ந்து
கொன்று போர் கடக்குமாயின்,
கொள்ளுதும் வென்றி; அன்றேல்
பொன்றுதும் அவனோடு''

என்றான்; ''போதலோ புகழ்அன்று'' என்றான். ஆகக்கூடிய காரியத்தை அழகாக எடுத்துச் சொல்லும் 'இளங் கன்று', 'முதிய சாம்பனி'ன் அறிவுக் கலக்கத்தையும் தெளிய வைத்து விடுகிறான்.

ஓடிய வானர சேனைகளையும் திரும்பி வரச் செய்துவிடுகிறது. 'சிலகற்றார் கண்ணும் உளவாம் பலகற்றார்க்கு அச்சாணி அன்னதோர் சொல்' என்ற வாக்கு உண்மைதானே? ஆங்கில நூல் கற்றோர் 'ஜூலியஸ் சீஸர்' நாடகத்தில் ஆன்டனியின் பேச்சாற்றலைப் புகழ்வர். அங்கதன் பேச்சாற்றல் அதற்குக் குறைவில்லாதது 'இராமன் ஆண்டால் என்ன, இராவணன் ஆண்டால் என்ன?' என்று ஓடிய வானரங்களையும், ஒதுங்கிய சாம்பனையுமே மாற்றிவிட்ட அங்கதனின் அறிவை, பேச்சாற்றலைக் குறைத்துக் கூற முடியுமா?

முன்னும் பின்னும்

திரு. அ. அறிவொளி

சாதனை மிக்க காப்பியம் கம்பனுடையது. எந்தவொரு பெரிய காப்பியத்தின் வெற்றிக்கும் அதன் கதையமைப்பே காரணமாகிறது. சிறந்த கதையமைப்பை அடையாளப்படுத்தும் பல உத்திகளில் பின் நினைப்புக் காட்சி (*Flash back*) ஒன்றே தனித்த முத்திரையும் பெறும்.

திரைப் படங்களின் கதையமைப்பில் பின் நினைப்புக் காட்சியின் இன்றியமையாமை பற்றி பேச்சு வந்தது. கம்பனில் தோய்வுமிக்க பேராசிரியர் சோ. சத்தியசீலன் அவர்கள் வசிட்டன் நினைவுகூரும் பின்நினைப்பைப் போல் அமைப்பதே சிறப்பு என்றார்கள். கம்பனின் பின்நினைப்புக் காட்சிகள் என் மனத்தில் படமாக ஓடின. எல்லாக் காட்சிகளையும்விட அவர் கூறிய காட்சியே வெற்றிபெறுவதை உணர்ந்தேன். என் மனத்தில் அசைபோட்ட அக் காட்சியின் மாட்சியை நீங்களும் மனத்தில் ஓட்டிப் பார்க்கலாமே!

''ஒருநாள் என்ன நடந்தது தெரியுமா?''- என்பதுபோல ஒருவர் மற்றவர்க்குச் சொல்வது போல் வரும். உடனே பழைய நிகழ்ச்சி கால் மணி நேரம் படமாக நமக்குத் தெரியும். இதுவும் பின்நினைப்புக் காட்சிதான். ஆனால் அலுப்புத் தரும் முறையாகுமிது! ஒருவர் தனக்குத் தானே நினைத்துப் பார்ப்பது மாதிரி சிறிய அளவில் ஓடுவதே சிறந்த பின்நினைப்புக் காட்சி யாகும்.

Flash என்ற சொல்லிலே அதற்கு இலக்கணம் சொல்லியதாகிவிட்டது. மின்னல்போல வந்துவிட்டுப் போகும் விளக்கமாக ஒரு காட்சி அமைக்கப்படுவதே *Flash back* என்பதற்கு உரிய கதையமைப்பு ஆகும். இந்தக் காலத்துத் திரைப்பட உத்தியைக்கூட அன்றைக்கே கம்பன் முழுதுணர்ந்தவனாய்க் காட்சியை அமைத்திருக்கிறான்.

திருஅவதாரப் படலத்தில் 6-வது பாடல் ஒன்றே அக்காட்சியை நமக்குக் காட்டுகிறது. இதற்கு முந்திய 5வது பாடலில் பின்நினைப்பு வரப்போவதற்குக் கட்டியம் கூறுவதையறிகிறோம். 27வது பாடலில் அக்காட்சி முடிந்ததைக் காணுகிறோம். 7 முதல் 26 பாடலில் உள்ள இருபது பாடல்களும் கம்பனுடையவை அல்ல என்றே அறிஞர்கள் கருதியிருக்கிறார்கள். இன்றும் அவைகளை நாம் ஆய்வு செய்தாலும் அந்த முடிவு தவிர வேறு ஒன்றுக்கு வர முடியாது. எனவே ஒரே பாடலில் கம்பன் பின் நினைப்புக் காட்சியைச் செருகியதாக அறியலாம்.

தனக்குப் பின் உலகுகாக்கத் தனக்கொரு குழந்தை (வாரிசு) வேண்டுமென்ற குறையைத் தசரதன் தெரிவித்ததும், பிரம்மாவின் பிள்ளையாகிய வசிட்டன் ''மனத்தில் எண்ணினான்'' என்று பின்நினைப்புக்கு வாயில் அமைக்கிறான் (5-வது பாடலில்) கம்பன். வாரிசு கேட்டவனுக்கு முன்பு வசிட்டனைப் பிரம்மாவின் வாரிசு என்று பாடியதே ஓர் அர்த்தமுள்ள இடம்தான்! திருப்பாற்கடலில் நடந்ததை நினைத்துப் பார்க்கும் திறமும் வசிட்டனுக்கு எப்படி முடிந்தது? என்பதற்கும் இந்தத் திறமையினால் கம்பன் விடை கூறிவிடுகிறான்.

அறுபதினாயிரம் ஆண்டுகள் அரசு செய்த தசரதன் இதற்கு முன்பு இப்படித் தன் குறையை இவனிடம் கூறியதே இல்லையோ? -இந்தக் கேள்விக்கும் இக் காட்சியே விடைகூறியதாகி விடுகிறது. பல முறை கேட்டதாக வைத்துக் கொள்வோம். அப்போதெல்லாம் இப்போது போலப் பின்நினைப்புக் காட்சியை வசிட்டனின் திரிகால உணர்வு எண்ணிப்பார்க்கவில்லை என்பதே விடையாகிவிடும். இதுவரை வாரிசு பற்றியே கேட்கவில்லை என்று வைத்துக்கொண்டாலும் இப் பின்நினைப்பால் அதற்கான காலம்

களிந்ததையும் இக் காட்சியே உறுதி செய்து விடுகிறது.

கடவுள் அவதாரம் நிகழ்வதற்கான வாயில் களையும் தர்க்க முறைக்கு ஏற்ப இக் காட்சி வழங்கிவிடுகிறது. அதாவது இதன் பிறகு கலைக்கோட்டு முனிவனை வைத்து யாகம் செய் தால் அவதார மூர்த்தியை மகனாகப் பெற முடியும் என்ற தொடர் விளைவை இக் காட்சியே உண்டு பண்ணுகிறது.

சரி! வசிட்டன் கண்ட காட்சி என்ன - அது ஐந்து தொடர்களாக நான்கே வரிகளில் காட்டப்படும் அரிய *Flash back* காட்சியாகும்.

வசிட்டன் மனத்தில் திருப்பாற்கடல் பரவிய நிலையில் படமாகிறது, ஆதிசேடன் படுக்கையாக அங்குச் சுருண்டு கிடப்பது காட்சி யாகிறது, மலையொன்று படுத்திருப்பது போல் கார்முகில் வண்ணத்து அண்ணல் அறிதுயில் கொள்வதும் விரிகிறது, அவனருகே சாகப் போகும் துயரத்தைக் காட்டியபடி சாகமுடியாத தேவர்கள் குழுமியிருப்பதும் புரிகிறது. அரக்கர் கொடுமையை அழிப்பேன் என்று திருமால் உறுதி கூறுவதும் மனத்திரையில் ஒலிக்கிறது. இவ்வளவுதான் இப் பின்நினைப்பில் காட்டப்படு கின்றன.

இரண்டு அல்லது மூன்று விநாடிகளில் இக் காட்சியை ஓடும் அளவில் இன்று திரைப்பட மாக்கிவிடலாம். இதை ஒருவன் மனத்தில் ஒரே நொடியில் எண்ணியதாகவும் நாம் நினைக்க முடியும். அப்படி எண்ணும் ஒருநொடி இடை வெளியும் கூட பிறர் அறியாதபடி மறைத்து நினைக்கவும் முடியும். வாரிசுக்கு வகை கேட்கும் அரசனிடம் இடைவெளியின்றியே பதில் கூறிய தாக அமைத்தால்தான் அரசனுக்கும் மனம் மகிழ்வதாகும்! இல்லாவிட்டால் 'என்ன பதில் சொல்லப்போகிறாரோ?' என்றும் அரசன் ஏங்க நேரிடும். அந்தக் காலச்சுருக்கத்தையும் கம்பன் கருதியே இருக்கிறான்.

ஒரு *Flash Back* மீண்டும் நினைக்கப்படுவ தாக அமைப்பதும் ஓர் உத்தியே ஆகும். பெயர் வைக்க வசிட்டனை அழைத்தபோது முதல் குழந் தையிடம் நின்று இதற்கு என்ன பெயர் வைக்க லாம் என்று சிந்திக்கும் இடத்திலும் இதே பின் நினைப்புக் காட்சியை வசிட்டன் மீண்டும் நினைத் திருக்கிறான். ''அரா அணையில் துயில்வோய் என அந்நாள் விராவி''- என்ற தொடர்களால் இதைக் கம்பன் உறுதி செய்கிறான்.

கருத்து, காட்சி, கதை, பாத்திரம், சுவை முதலியவைகளை மாற்றும் இடங்களில் இப் பின் நினைப்பு செருகப்படுவதுண்டு. இக் காட்சி யும் இவைகளை மாற்றியமைக்கவே துணை நிற்பதையறிகிறோம்.

இக்காலத்து உத்திகளையும் எண்ணிப் பார்த்த பெரிய கலைஞன் நம் கம்பன்! அவன் மனத்திரையில் இக் காப்பியம் முன்னும் பின்னும் திரைப்படமாகவே ஓடியிருக்கும் என்றே நாம் கருதும் களங்கள் பல உள்ளன. கம்பன் கைச்சரக்கில் புதிய உத்திகள் புலப்படு வதை மிகப் பல இடங்களில் நாம் காணமுடிவ தால் தான் அவன் செய்த காப்பியத்தைப் பிரம்மா கூட செய்ய முடியாமல் போய்விடு கிறது!

அருமருந்து

சுகி. சிவம், பி. ஏ., பி. எல்.,

ஒருவர் இன்னெருவரைப் புரிந்து கொள்வது என்பது சுலபமான ஒன்ரு? இல்லே. கொஞ்சம் சிரமமான ஒன்று. அறிவும் ஆற்றலும் உள்ளவர்கள் இக்கலேயில் வல்லவராக விளங்குபவர். விழிகளேத் தராசு ஆக்கி, இன்னெருவரை விளங்கிக் கொள்வது. அவர்கள் உள்ள உணர்வைப் படம் பிடித்துப் பார்ப்பது என்பது பெருங்கலே. இக்கலேயில் வல்லவனுக அனுமனேப் படம் பிடித்தார் கம்பன்.

சீதையைப் பிரிந்து, இராம இலக்குவன் இருவரும் கிட்கிந்தைக்குள், ரிசிய சிருங்க பர்வதத்தில் சுக்ரீவன் துணே தேடி வரும் இடம். கண்களில் ஒருவகை தேடுதல் தெரிகிறது. தொலேவில் இருந்து கண்ட சுக்ரீவன் பயத்தால், பகைவனுகத் தெரிகிருன் பகவான். அனுமானிப்பதில் வல்ல அனுமான், விழிகளால் அவர்களே விமர்சிக்கிருன். தேடுகிருன் என்று தெரிந்தான்.

எல்லேயின்மையான பரம்பொருள், எல்லேக்குட் படுத்திக்கொண்டு அல்லல் உறுவதை அவன் உணர்கிருன். ஆம். தேட வேண்டிய அவசியமில்லாதவன் தேடித் தேடி அலேவதைப் புரிந்து கொண்டான். இன்னென்று, எல்லோராலும் தேடப்படுகிறவன் இப்போது தேடியலேகிருன் என்பதையும் அவன் விளங்கிக் கொண்டான்.

'' யாவர் ஒப்பவர் உலகின் '' என்றும் '' யாதிவர்க்கரிய பொருள் '' என்றும் வருகிறவன், தேட வேண்டாதவன் என்றும் ''சிந்தனேக்குரிய பொருள் தேடுதற்குறு நிலேயர் '' என்று தேடுவதை வியந்தும் பேசுகிருன்.

திருமால் என்ற எல்லேயின்மை தேட வேண்டிய அவசிய மற்றது. இராமன் என்ற மானுடத் தோற்றம் எல்லே கட்டிக்கொண்டு தேடி அலேகிறது. திருமால், இராமன் என்ற சொற்கள் அனுமானிடம் தோன்றவில்லேயே ஒழிய அந்தச் சொற்கள் சுட்டும் பொருட் தொகுப்புகளே அவன் அறிவு தீண்டிவிட்டது.

அறிவு இன்னும் கூர்மையடைகிறது. தேட வேண்டாதவர், தேடுகிருர் என்று புரிந்ததும் எதைத் தேடுகிருர்கள் என்று அது வினு எழுப்பியது. '' அருமருந்து அனேயது இடை அழிவு வந்துளது. அதனே இரு மருங்கினிலும் நெடிது துருவுகின்றனர் '' - அனுமன் பேச்சு இது.

அருமருந்து (அமிர்தம்) போன்ற ஒன்றைத் தொலேத்து விட்டார்கள். அதிலும் புதிதாக ஒன்றைத் தேடவில்லே. இருந்ததை இழந்து விட்டுத் தேடுகிருர்கள். எவ்வளவு தெளிவான முடிவு? 'இடை அழிவு வந்துளது' என்ற சொல் இதனே விளக்கிற்று.

அருமருந்து என்று பொதுவாக அனுமன் சொன்னதால் இழந்த பொருள் உயர்வானது என்று மட்டும் அனுமன் புரிந்துகொண்டான்- இதுசரியா?

இல்லே, அருமருந்து என்ற சொல் மூலம் மனேவியை சுட்டுகிருன் அனுமன். அவன் அபிப்ராயத்தில் அவன் அவன் மனேவி அவன் அவனுக்கு அருமருந்தாக இருக்கவேண்டும். (திருமணம் ஆகாதவர்களுக்கு மனேவி என்ற உறவு மீது அப்படி ஒரு அபிப்ராயம் இருக்க வாய்ப்புண்டு)

அருமருந்து என்று பொதுவாகச் சொல் வருகிறபோது மனேவி என்று எப்படிப் பொருள் கொள்வது? ஊர்ஜிதம் செய்யாமல் மனேவியைப் பிரிந்தான். என்று சொல்லிவிட அனுமன் அஞ்சியிருக்கலாம். ஆனுல் அருமருந்து என்ற சொல்லால் இராமனுக்கு அருமருந்து அவன்

மனைவியான சீதை என்றே பொருள் கொள்ள வேண்டும்.

இதை எப்படி நிருபிப்பது? வருகிற இராமன் மனைவியைப் பிரிந்து தேடுகிருன் என்பதை அனுமன் உணர்ந்தான் என்று எப்படி நம்புவது?

கதை மேலே நிகழ்கிறது. சுக்ரீவன் விருந்து கொடுக்க ''பொருந்து நன் மனைக்கு உரிய பூவையைப் பிரிந்துளாய் கொலோ நீயும்'' என்று இராமன் பேசுகிருன். ''நீயும் மனைவியைப் பிரிந்திருக்கிருயா?'' என்பதில் விழுந்த உம்மை இராமனும் பிரிந்திருக்கும் உண்மையை உரைத்தது.

நெடுநேரம் அனுமன் மனத்திருந்த ஐயம் நீங்கியது. சுக்ரீவன் நிலையைப் பேசத் தொடங்கியதும், சுக்ரீவன் மனைவியைப் பிரிந்திருக்கிருன் என்று பேச வேண்டிய இடத்தில் ''உருமை என்று இவர்க்கு உரிய தாரமாம் அருமருந்தையும் அவன் விரும்பினுன்'' என்ருன். 'தாரமாம் அருமருந்து' என்ற சொல்லால், இராமனைப் பார்த்த உடன், அருமருந்தை இழந்திருக்க வேண்டும் என்ற அனுமன் கூற்று, மனைவியைப் பிரிந்தான் என்பதைத் தெரிந்துகொண்டு சொன்னதாகத்தானே பொருள்.

இன்னெரு விஷயம். மனைவி கணவனை வாழ்விக்கும், உயிர் நீட்டும் அமிர்தமாய் அருமருந்தாய் இருக்கவேண்டும் என்பது கம்பன் கொள்கை. சிலருக்கு ஆலகால விஷமாய் மனைவி அமைகிருர்களாமே? அப்படியா?

கவியரசர் கண்ணதாசன் 27-3-72 ஆம் தேதி காரைக்குடி கம்பன் திருநாளில் தலைமை ஏற்று ஆற்றிய கவிதை

அன்னைத் தமிழ் மொழிக்கு
அணிமணிகள் சூட்டுவித்தான்
தன்னைத் தமிழினுக்கே
தந்துவைத்த கம்பனவன்!
பொன்னைக் கொடுத்திருந்தால்
பொழுதறிந்து போயிருக்கும்;
பூமாலை போட்டிருந்தால்
பொழுதுபட வாடிவிடும்;
தன்னை எடுத்தளித்தான்
தாய் காத்த பிள்ளையென
மன்னன் அவனிடத்து
மனம்கொடுத்து வாழ்வளித்த
வெண்ணை நல்லூர்
சடையனவன் விட்டகுறை தொட்டகுறை
காரைக்குடி நகரில்
கவனிக்கப் பட்டதம்மா!

சாகா வரம்படைத்த
தமிழரசன் கம்பனுக்கு
சா. க. எடுத்த விழா
சடையப்பன் தந்த விழா !
ஆகாஇக் கவியரங்கில்
அடியேன் தலைமைபெற
மாகா வியங்கள் ஒன்றும்
மன்னனைப்போல் யாத்ததில்லை ;

முப்பத்து ஆண்டுகளின்
முன்னாக இச்சபையில்
குருகுலத்து மாணவர்கள்
கூட்டமாய் வந்திருந்தார்
பதினாறு வயதான
பாலகனாய் நானுமிந்த
கம்பன் விழாக் கண்டு
கவிகேட்க வந்திருந்தேன்

டி. கே. சிதம்பரனார் தெள்ளுதமிழ்க்
கம்ப கதை
போக்கை உரைத்ததிலே
புல்லரித்து நின்றிருந்தேன்

இன்று விழாத்தலைமை
எனக்குக் கிடைத்ததற்குக்
கம்பன்தான் காரணமோ
கணேசன் காரணமோ
செம்பொன்னாள் மலையரசி
திருவருள்தான் காரணமோ
இந்தப் பதவியை நான்
இந்தியப்பே ரரசாளும்
மந்திரிகள் பதவியினும்
மதிப்புமிக்க தாய்நினைப்பேன்
அந்த வகையில் என்னை
ஆளாக்கி வைத்ததற்கு
செந்தமிழன் சா. கா.
திருவடியை வணங்குகிறேன்!
வந்திருக்கும் கவிஞரையும்
வரவேற்ற நண்பரையும்
சொந்தவூர் என்பதனால்
சொந்தமுடன் பார்த்திருக்கும்
உங்களையும் வாழ்த்தி எந்தன்
உரையைத் தொடங்குகிறேன்:

எங்கிருந்து பார்த்தாலும்
எனைப்பார்க்கும் சூரியன்போல்
பார்ப்பவர்கள் பார்ப்பதுபோல்
படமாவான் கம்பகவி !
கல்லில் விளையாடிக்
களிக்கின்ற பிள்ளையென
சொல்லில் விளையாடும்
ஜோதிஅந்தக் கம்பகவி !

வண்ணத் தமிழ்மொழிக்கு
வார்த்தை கொடுத்த கவி!
எண்ணத் தொலையாத
எழில்கள் படைத்தகவி!
தாய்மைக்குக் கோசலையைச்
சான்றாக்கி வைத்தகவி!
வாய்மைக்குத் தசரதனை
வானவன் றமைத்தகவி!
காதலுக்கு ஜானகியைக்
கணக்காக்கி வைத்தகவி!
கருணைக்கு ராமபிரான்
காவல் உரைத்தகவி
நட்புக்கோர் குகன்அவனை
நாட்டிப் படைத்தகவி
நல்லன்புச் சோதரருக்கு
லெட்சுமணக் கண்டகவி
பண்புடைய தம்பிக்குப்
பரதனென வைத்தகவி
சொல்லாத சொல்லுமில்லை
சொல்லாப் பொருளுமில்லை
இல்லா தனஇல்லை;
எல்லாம் இயற்றிவைத்தான்
காண்மயங்கப் பாடிவிட்ட
கவிச்சக்ர வர்த்தியினை
நான் மயங்கிப் பாடுவது
நாலா யிரத்தில் ஒன்று!

அவனிடத்துத் தமிழ்வாங்கி
அவனை நான் பாடுகிறேன்
சிவனிடத்து வரம்வாங்கிச்
சிவனடியார் ஆவதுபோல்!
மன்னவனைப் போல்பாடி
மண்டலத்தை ஆள்வதற்கு
இன்னொருவன் பிறப்பானா
இன்றுவரை காணவில்லை
அப்படிநான் பாட
ஆசைகொண்ட காலமுண்டு
எப்படியோ சிலபாடல்
எழுதியும் வைத்ததுண்டு
ஆடரங்கம் கீறிவைத்த
அப்பாவிப் பிள்ளையைப்போல்
பாடரங்கம் ஏறியதாய்
பாடினான் கம்பனவன்

நானோ—

தாயார் திருமுகத்தைத்
தடவுகின்ற பிள்ளையைப்போல்
தேரா மனத்தோடு
சிறுகவிதை பாடியவன்
ஆங்குயர்ந்த கோபுரத்தை
அண்ணாந்து பார்ப்பதுபோல்
வானுயர்ந்த வெண்ணிலவை
மல்லாந்து காண்பதுபோல்
கம்பனைதான் காணுகிறேன்,
கண்மயங்கிப் பாடுகிறேன்!

அழகையெலாம் ஒன்றாக
அவன்கண்டான் சீதையிடம்
தமிழையெலாம் ஒன்றாக
நான்கண்டேன் கம்பனிடம்
கம்பனையே படித்ததனால்
கவியெழுதக் கற்றவன்யான்
கம்பனையே ரசித்ததனால்
காதலிக்கக் கற்றவன்நான்
கம்பனை முரண்இயல்பைக்
கவியாக்க வந்திருக்கும்
அம்பொன் தமிழ்க்கவிகள்
அனைவரையும் அழைக்கின்றேன்.

கம்பனின் தாரை

கம்பன் பித்தன் S. N. குப்புசாமி முதலியார்

கம்பன் காப்பியத்தில் தாரை என்னும் பாத்திரம் எவ்வாறு சித்தரிக்கப்பட்டுள்ளது என்பதை பார்ப்போம். இராமாயணக் கதையிலே, இயல்பாகவே இருக்கக்கூடிய பாத்திரம் தான் தாரையே எனினும், கம்பனின் தாரை, தனித்தன்மையோடு அமைந்த குண நலன்களையும், பேச்சுத் திறனையும், செயலாற்றும் நுட்பத்திறனையும், மதிக்கத்தக்க நடை, உடை, பாவனை. தோற்றம் கொண்டவளாகத் திலங்குவதைக் காண்கிறோம். அவளது அருள் உள்ளத்தை, மதி நுட்பத்தை, மனை வாழ்வை, கைம்மை நோன்பை, கற்பின் திண்மையை எவ்வளவு அழகுறக் காட்ட வேண்டுமோ, அப்படி அமைத்தவன் கம்பன். படிப்போர் அனைவர் மனத்திலும் நீங்காத இடம் பெறுபவளாக இந்த மலைக்குல மயிலை, தன் காப்பியம் படைக்கும் செம்மாந்த திறனால் உலாவ விட்டிருக்கிறான்.

தாரை-அகலிகை, திரௌபதி, சீதை, மண்டோதரி ஆகிய நால்வருடன் இணைந்து ஐந்து கன்னியரில் ஒருத்தியாக பாராட்டப்படுகிறாள் என்றால், அந்தப் பாராட்டுக்களுக்கு வழி வகுத்தவனும், அடித்தளம் அமைத்தவனும், ஏற்றம் தந்தவனும் கம்பனே ஆவான். தன் காப்பியத் தலைவி சீதையைக் கற்பின் கனலியாய் படைத்து இராவணன் மனைவி மண்டோதரியையும், வாலி மனைவி தாரையையும் கற்பின் திண்மை வாய்க்கப் பெற்ற கற்பின் செல்விகளாய் காப்பியத்தில் அழகுற வடித்துள்ளான்.

தாரை, பிறப்பினைப் பற்றிய ஒரு கதையும் காப்பியத்தில் இடம் பெற்றுள்ளது. மற்றைய மாந்தரைப் போல உடலில் தங்கி நின்று பிறவாது, கடலிடை எழுந்த அமுதில் தோன்றிய நங்கை அவள் என்றும், வாலி கடல் கடைந்த போது, அவ்வாழி வாய்த் தோன்றிய அமுதச் செல்வியை, அமரர் அவ் வீரனுக்கே அளித்தனர் என்பதாகக் கூறப்படுகிறது. வலிவும், வீரமும் மிக்க வாலியின் வாழ்க்கைத் துணைவியாகவும், மதிமிக்க மந்திரியாகவும், கற்பின் திலகமாகவும், கணவன் பாசத்தில் மிகச் சிறந்தவளாகவும், அங்கதனின் நற்றாயாகவும், மாற்றார் மனதைப் புரிந்து அறிந்து அதற்கு ஏற்றவாறு இன்னுரை வழங்கும் சாதுர்யம் மிக்கவளாகவும் கணவன் இறந்த பிறகு, கற்பு நெறி வழுவாமல் கைம்மைக் கோலம் பூண்டு மங்கல அணியையும் மற்ற அணிகளையும் களைந்து, வண்ணமும் சுண்ணமும் துறந்து, மலர்களை மறந்து, மார்பையும் கழுத்தையும் ஆடையால் போர்த்திய வளாய் விளங்கியதை கம்பனின் தாரையிடத்தில் காண்கிறோம்.

வான்மீகி காட்டும் தாரை வேறு. கம்பனின் தாரை வேறு. குரங்கினத்து இயல்புப்படி வாழ்ந்தவளாக வான்மீகத்தில் சொல்லப்படும். கம்பனிலோ, இலக்குவனுக்கு தன் தாயாரை நினைப்பூட்டும் அருட் கோலத்தவளாகவும், சொல் நயம் மிக்கவளாகவும், மதிக்கத்தக்கவளாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளது.

இராம காதையை முதன் முதலில் நூலாக இயற்றி வழங்கியவர் வான்மீகி. இராமாயணக் கதை தமிழ் மக்களைப் பெரிதும் கவர்ந்திருந்தது. கம்பன் காலத்திற்கு முன்பும் அவன் காலத்தேயும் இராம காதை செய்திகள் அளவில் தமிழ் மக்களிடையே பரவி, இருந்ததேயன்றி, இராம காதை முழுவதையும் கூறும் நூல் தமிழ் மொழியில் இல்லாமல் இருந்தது. எனவே தமிழ் மக்கள் படித்து, சுவைத்து, பயின்று பயனுற வேண்டி இராமாவதாரத்தை கம்பன் எழுதினான்.

வான்மீகியிடம் பொறாமை கொண்டோ, அவரை மிஞ்ச வேண்டும் என்றோ கம்பன் தம் காப்பியத்தைப் படைக்கவில்லை. வான்மீகியிடமும் அவர் காவியத்தின் மீதும் அவனுக்கிருந்த ஊற்றம், ஈடுபாடு, பக்தி இவை காரணமாக

அவர் படைத்த பாத்திரங்கள் மாசு படக்கூடா தென்கிற மனோபாவத்தினுல் தான் அவர் தன் காப்பியத்தை மாற்றிப் புனைந்திட்டார். வான்மீகி யை எவ்வாறெல்லாம் அவர் தன் காப்பியத்தில் புகழ்ந்து குறிப்பிட்டிருக்கிருர் என்பதை நாம் மறந்துவிடலாகாது.

கம்பன், தன் காப்பியத்தின் குறிக்கோள், தம் தனிக்கொள்கைகள், நம்பிக்கைகள், தான் மக்களுக்கு வலியுறுத்த நினைக்கும் லட்சியக் கோட்பாடுகள், சீலம், ஒழுக்கம், தான் இயற் றும் காலம், சூழ்நிலை. தன் காப்பியத்தைப் படித்து பயனுற வேண்டிய தமிழ் மக்களின் நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், மனவியல் புகள், இவற்றிற்கு ஏற்ப, தன் காவியத்தில் வரும் பாத்திரங்களை மூல நூலினின்றும் குற்றம் களைந்து, குறை நீக்கி, நிறைவுப்படுத்தி அவற்றை அழகுறச் செய்து படைத்துள்ளார். கம்பனின் பாத்திரங்கள் உயிர்ப்பும் துடிப்பும் உள்ள மகோன்னதமான பாத்திரங்கள். கம்பன் காப்பியம் அறிவுக்கு விருந்தாகவும் படித்து சுவைத்து இன்புற அமைந்த சொல்லோவியம், கவிநயம், அணிநலம், இலக்கியச் சுவை மிக்க நூல் மட்டும் அன்று, அது உள்ளத்தை ஒளி யுறுத்தி, உணர்வை உருகச் செய்து குணநல பண்புகளை செப்பனிட உதவும் வாழ்வியல் படைப்பாகும்.

தாரை, இராமகாதையில் கிட்கிந்தா காண் டத்தில் மட்டுமே, மூன்று காட்சிகளில் தோன்று கிருள். பாத்திரப் படைப்பில் அவள் சிறு பாத் திரமேயானுலும், கம்பனின் கைவண்ணத்தால், என்றும் நிலவும் உன்னதமான பாத்திரமாக, படிப்போர் நெஞ்சில் நீங்கா இடம் பெறும் அளவுக்கு உயர்ந்து நிற்பதைப் பார்க்கிரேம். வான்மீகத்தில் வாலி இறந்த பிறகு, தாரை சுக்ரீவனுடன் சேர்ந்து வாழ்ந்து இன்பம் துய்ப் பவளாக இருந்த நிலையினை முற்றிலுமாக மாற்றி, திருத்தி அவள் வணங்கத்தக்க கைம்மை கோலத்தை பூண்டு யாவரும் மதிக்கத் தக்கவளாக வாழ்ந்திருந்ததாக கம்பன் காட்டு கிருன். அம்மாதிரியாக கம்பன் ஏன் மாற்றினுன் என்று சற்று சிந்தித்து பார்ப்பதற்குரிய முக்கிய மாற்றம் இது. எந்த ஒரு பிறன் மனை விழைத்த குற்றத்திற்காக வாலியை இராமன் கொன்ருனே, அதே குற்றத்தை அவன் சகோ தரனுக ஏற்றுக் கொண்ட சுக்ரீவன் வாலியின் மனைவியை அவன் இறந்த பிறகு அனுபவித்துக் கொண்டிருந்தான் என்று தன் காப்பியத்தில் குறிப்பிடவும் அஞ்சுவான் போலும். அப்படி குறிப்பிட முற்படாததால், இராமன் அதனைப் பார்த்துக் கொண்டு எப்படி வாளாய் இருந் தனன் என்கிற கேள்வி எழாமல் இருக்கக் கருதி யவன் போலும், எந்த அதே புணர்ச்சியை வாலி விஷயத்தில் ஏற்க மறுத்தானே அதே செயலை சுக்ரீவன் விஷயத்தில் விட்டுக் கொடுத்தான் என்கிற அபவாதம் வந்து விடக் கூடாதே என நினைத்தவன் போலும், தான் காப்பியத்தில் வலியுறுத்த நினைக்கும் சீலம், ஒழுக்கம், கற்பு ஆண் கற்பு நெறி இவைகளுக்கு, இயற்கையா கவே மாறுபட்ட தன்மையுடைய விலங்குகளி டையும் கூட விரும்பத்தகாத மாறுபட்ட செய்கை இருக்ககூடாதென்கிற திட்டமிட்ட வன் போலும், கம்பன் தாரையை வாலி இறந்த பிறகு தூய்மையான வாழ்க்கையே மேற் கொண்டிருந்தவளாக சித்தரிக்க முற்பட்டிருக்க லாம். இதனுல் நாம் இன்னென்றையும் தெளி வாக உணர முடிகிறது. நாமக்கல் கவிஞர் உரைத்தவாறு, கம்பன் தன் காப்பியத்தை எண்ணி எண்ணியே — திட்டமிட்டே, மனதில் இப்படித்தான் அமைய வேண்டும் என்று வரை யறுத்துக் கொண்டே புனைய முற்பட்டிருக்க வேண்டும். தன் கற்பனைக்கும், தன் மனதில் உருவாக்கிய உருவகங்களுக்கும் ஏற்றவாறு பாத்திரங்களை சீர்படுத்த முனைந்திருக்கிருன் என்பது வெளிப்படை.

தாரையை, கம்பன் முதன் முதலில் அறிமுகப் படுத்துவதே ஒரு தனி அழகு. சுக்ரீவனுடைய அறைகூவலை வாலி கேட்டு போருக்கு அஞ்சாது போக எழ முற்பட்டபோது, தாரையைக் காண் கிரேம், கைகேயியை முதலில் அறிமுகப்படுத் தும் போது ''பாற்கடல் படுதிரைப் பவளவல் லியே'' எனக் குறிப்பிட்டது போல தாரையை ''அமிழ்திற் ரேன்றிய வேயிடைத் தோளினுள்'' என்றும் நெருங் கூந்தல் உடையாள் என்றும் எடுத்த எடுப்பிலே குறிப்பிடுகிருன்.

''ஆயிடை, தாரை என்ற அமிழ்தின்
தோன்றிய
வேயிடைத் தோளினுள், இடை விலக்கினுள்;

வாயிடைப் புகைவர, வாலி கண் வரும்
தீயிடை, தன் நெடுங் கூந்தல் தீகின்றுள்''

சுக்ரீவன், தானுக வலிய வந்து, போருக்கு அழைக்கிருன் என்பதை அறிந்த தாரை மதி மந்திரியைப் போல, கணவனுக்கு வரும் பொருள் உரைத்தனள். சுக்ரீவனுக்கு இராமன் துணை வந்துள்ளான் என்பதை தானுக ஊகம் செய்யாமல், கண்டவர் பேச்சைக் கேட்காமல், துள்ளிய அன்பினர் சொல்லினர் என்று வாலிக்கு, அவன் பெருமிதத்தோடு தன்னிடம் அமரரும், அவுணரும், தோற்றனர், மற்றும் தன் பெயர் சொலக் குலேயும், பேதையல் எதிர் குவர் எனினும் பெற்றுடை ஊதிய வரங்களும் உரமும், உள்ளதில் பாதியும் என்னதால் பகைப்பது எங்ஙனம் எனப்பகன்ற போது தாரை அறிவு நலம் சான்ற உரை செய்தாள். அவள் உரை விதி வயப்பட்ட வாலியின் காதில் விழ வில்லே. அவளேப் பார்த்து நீ பெண் தானே! பெண் புத்தி பின்புத்தி தானே! அதனுல் பிழை செய்தாய்! என்பது போலவும், வேறு யாராகி லும் இராமனேப் பற்றி தவறுதலாகக் கூறி இருப்பின் மடிந்திருப்பர். பெண் என்பதால் உன்னேக் கொல்லாமல் விடுகிறேன். நீ பிழைத் தாய் என்பது போலவும் இரு பொருள்பட வாலி கூறுவான்

''உழைத்த வல் இரு வினேக்கு ஊறு
காண்கிலாது
அழைத்து அயர் உலகினுக்கு அறத்தின்
ஆறு எலாம்
இழைத்தவற்கு இயல்பு அல இயம்பி என்
செய்தாய்?
பிழைத்தனே; பாவி! உன் பெண்மையால்''
என்ருன்

''ஏற்றபேர், உலகு எலாம் எய்தி, ஈன்றவள்
மாற்றவள் ஏவ, மற்று, அவள் தனே
மைந்தனுக்கு
ஆற்ற அரும் உவகையால் அளித்த ஐயனேப்
போற்றலே; இன்னன புகறல் பாலேயோ?''

''தன் துணே ஒருவனும், தன்னில் வேறு
இலான்
புன் தொழில் குரங்கொரு புணரும்
நட்பனே?''
''எம்பியும யானும் உற்று எதிர்ந்த
போரினில்
அம்பு இடை தொகுக்குமோ, அருளின்
ஆழியான்?''

வாலி போருக்கு எழுந்தான். சுக்ரீவனே நையப் புடைத்தான். சமயத்தில் இராமன் உதவி சுக்ரீ வனுக்குக் கிடைத்தது. மலேயென நின்ற வாலி சாய்ந்து தரை மட்டமாயினுன்.

காப்பியத்தில், தாரையை அடுத்து இரண்டாம் முறை காணும் காட்சியைப் பார்ப்போம். முதல் முறை அறிமுகமான அளவில், அவள் மீது நமக்கு ஒரு நல்லெண்ணமும் உயர்ந்த நோக்கும் ஏற்படுகிறது எனில், இரண்டாம் காட்சி முடிவில் அவள்மீது பெரும் மதிப்பு உருவாகும் வண்ணம் ஏற்படுகிறது. வேல் விழித்தாரை, கணவன் வாலியின் வீர மரணம் கேட்டு, களம் புகுந்து, அங்கே அவள் அலங்கல் மார்பில் புரண்டனள். ஏங்கினுள். இரங்கி விம்மி உருகினுள். இருகை கூப்பித் தலேயில் சோர்ந்து சரிந்து வீழ் குழலி தனேத் தள்ளிய வாறே புலம்புகிருள்.

'' வரை சேர் தோளிடை நாளும்
வைகுவேன்,
கரை சேரா இடர் வேலே காண்கிலேன்;
உரை சேர் ஆர் உயிரே! என் உள்ளமே!
அரைசே! யான் இது காண அஞ்சினேன்''

'' துயராலே தொலேயாத என்னேயும்
பயிராயோ? பகையாத பண்பினுய்!
செயிர் தீரா விதி ஆன தெய்வமே!
உயிர் போனுல், உடலாகும் உய்வரோ?''

என் உயிருக்கு உயிரானவனே! என் உள்ளத் துக்கு உள்ளமானவனே! அடிமையான எனக்கு ஆண்டவனுனவனே! எப்போதும் உனது மலே போன்ற தோள் மேலே இனிதே தங்கி இருந் தேன். இதுவரை கரையில்லாத துன்பக் கடலே காணுதவளாகிய நான் இந்தக் காட்சியை காணப் பயப்படுகிறேன்! இப்படி நேருமென்று நான் அஞ்சினேன் உரை செய்தேன் வருவதை முன் கூட்டியே உணர்ந்திருந்த தாரை, துய ராலே தொலேயாத தன்னேப் பகையாத பண்பு டைய வாலி அழைத்துக் கொள்ளக் கூடாதோ எனக் கேட்கிருள். உயிர் போன பின் உடல் வாழ்தல் என்பது என் விதியா. எமனுக்கு தாங் கள் தேவர்க்கு அமிழ்துண்ண நல்கிய பெருத் தகை என்பது தெரியாதோ? நான் இப்படி கதறுவது கண்டும் பேசாதிருக்கிறீர்களே - என் னிடம் தாங்கள் கண்ட குறைதான் என்ன? நான்

இங்கு வந்து நிற்க நீர்வானேர் நாடு சென்றது எங்ஙனம்? நீ எனது ஆவி என்பீர்களே - அது பொய்யோ? பொய்யுரையோ; புண்ணியனே சொல்லுங்கள் என்று கேட்டு, படிப்பவர் அனைவர் மனதையும் உலுக்கும் வகையில் புலம்புவதைக் காண்கிறேம்.

''நையா நின்றனென், நான் இருந்து இங்ஙன்;
மெய் வானேர் திருநாடு மேவினுய்;
ஐயா! நீ எனது ஆவி என்பதும்
பொய்யோ? பொய் உரையாத புண்ணியா!

நான் தங்கள் சிந்தையில் இருந்திருந்தால், தங்களை வௌவிய செஞ்சாரம் என்னையும் பொலியிராதோ?

''செரு ஆக தோளா! நின் சிந்தை உளேன் எனின்,
மருவார் வெஞ்சரம் எனையும் வவ்வுமால்;
ஒரு வேனுள் உளை ஆகின், உய்தியால்;
இருவே முன் இருவேம் இருந்திலேம்''

நீ அமுது கொடுக்க உயந்தோம் என நன்றியறிதலுடன் தேவர்கள் வந்து தங்களை எதிர்கொண்டழைத்தனரோ?

''எந்தாய்! நீ அமிழ்து ஈய, யாம் எலாம் உய்ந்தேம்'' என்று, உபகாரம் உன்னுவார்
நந்தா நான் மலர் சிந்தி, நண் போகும்
வந்தாரோ எதிர், வான் உளோர் எலாம்''

அப்போதே சொன்னேன் தாங்கள் கேட்கவில்லை. அருளாளன் இராமன் அப்படி செய்ய மாட்டான் என்றீர்கள். உங்கள் தம்பியின் விதியை முடிக்கச் சென்ற தாங்கள் உங்களுடைய விதியை முடிதுக்கொண்டீர்களே! உங்களை என்று காண்பேன்.

''சொற்றேன், முந்துற; அன்ன சொல் கொளாய்;
அற்ருன், அன்னது செய்கலான்'' என,
உற்ருய்; உம்பியை; ஊழிகாணும் நீ,
இற்ருய்; நான் உனை என்று காண்கெனே?''

இவ்வாருக, கணவன்பால் கொண்டிருந்த தன் பாசம், பேரன்பு வெளிப்பட, புலம்புவதைப் பார்த்து அவளுக்கு கணவனிடம் இருந்த நெருக்கத்தையும் பிணைப்பையும் உணர்ந்தவர்களாய், அவள் வேதனையைப் பார்த்து அவள் மீது அனைவருக்கும் அளவு கடந்த இரக்கம் ஏற்படுகிறது.

இங்கே இந்த இரண்டாம் காட்சியில், தாரையின் புலம்பலைப் படிக்கும்போது நம்முள் சில எண்ணங்களும் சந்தேகங்களும் வலுவாக ஏற்படச் செய்கின்றன.

1. தாரை தன் புலம்பலிடையே, இராமனைப் பற்றி ஒரு கருத்தை வெளியிடுகிருள்

''தருமம் பற்றிய தக்கவர்க்கு எலாம்,
கருமம் கட்டளை என்றல் கட்டதோ?''

அதாவது அறத்தைப் பற்றுக் கோடாகக் கொண்டு, தம் செயல் வழுவாது நடுநிலைமையில் நின்று செயல்படுவார்க்கு அவர் செயலே உரைகல் என்கிற வள்ளுவர் வழி வாக்கும் பொய்த்ததோ -என்று இராமனுக்கு கழிவிரக்கம் கொண்டு பேசுதலைப் பார்க்கிறேம். இராமனுல் அரச நெறி அழிந்ததை வாலி குறிப்பிட்டு சொல்கிருனே.

''வாலியைப் படுத்தாய் அலை; மன் அற
வேலியைப் படுத்தாய் - விறல் வீரனே!''

அதுபோல, தாரையும் தனக்கு வந்துள்ள அவலத்தையும் மறந்தவளாய், இராமனுக்காக இரங்கும் பரந்த உள்ளத்தைக் காண்கிறேம்.

2. காப்பியத்தில் சீதையின் அளவுக்கு, உயர்த்திப் படைக்கப் பெற்ற மண்டோதரி இராவணன் இறந்து கீழே விழுந்து கிடந்த போது - அவன் வாழ்நாளில் செய்த தவற்றினை சுட்டிக் காண்பித்து குறை காண்பவளாகப் புலம்புவதைக் காண்கிறேம்.

''கள் இருக்கும் மலர்க் கூந்தல் சானகியை
மனச் சிறையில் கரந்த காதல்
உள் இருக்கும்'' எனக் கருதி, உடல் புகுந்து
தடவியதோ ஒருவன் வாளி?''

''காந்தையருக்கு அணி அனைய, சானகியார்
பேர் அழகும், அவர் தம் கற்பும்

–ஏந்து புயத்து இராவணனார் காதலும்...''

வாலி இறந்த பிறகு, அவன் மீது வந்து வீழ்ந்து அரற்றிய தாரை, அம்மாதிரி எந்த விதமான குற்றமும் வாலி புரிந்தவனுகவோ அந்தக் குற்றம் புரிந்ததால் அன்றோ நீ மாண்டு கிடக்கிருய் என்ருே இகழ்ந்தாள் இல்லே - புலம் பினுள் இல்லே.

அப்படியானல் வாலி-ருமையின் உறவுப் பற்றிய எந்தவிதமான முடிவும் ஏற்படுத்திக் கொள்ளவொட்டாமல், இது தாரையின் வலு வான சாட்சியாய் உள்ளது.

3. தன் ஒருவன் இடம் தான் வாலி அன்பு டன் இணேந்து, பிணேந்து வாழ்ந்திருந்தான் இருவரும் உயிரும் உடலுமாய் நேசமுடன் பாச முடன் வாழ்ந்தோம். நாள் தோறும் அவன் வரை சேர் தோளிடை வைகுவேன் என தாரை புலம்புவதைப் பார்த்தால் ருமையின் பால் வாலி நாட்டம் கொண்டிருந்தாஞ என் பதே ஐயத்திற்கு இடமளிக்கும் வகையில் இருப் பதைப் பார்க்கிருேம். இவ்விடத்தில் நாம் ஆழ்ந்து கவனிக்கத்தக்கது ஒன்றுளது. கம்பன் தன் காப்பியத்தில் தாரையை, அனுமான் அள வுக்கு சொல்லாற்றும் திறமும், இனிமையும் அமைந்த சொல்லின் செல்வியாகவும், மண்டோ தரி அளவுக்கு கற்பில் உயர்ந்தவளாகவும் சித் தரிப்பதோடு நின்று விடவில்லே, கணவன் மீது அவள் கொண்டிருந்த மட்டற்ற பாசத்தையும் அவனும் அவள்பால் கொண்டிருந்த ஈடுபாட் டினேயும் விளக்கமாக சுட்டிக் காட்டியுள்ளான். இந்த அடிப்படையில், தாரையின் புலம்பல் ருமை-வாலி உறவு பற்றி பெரிதும் சந்தேகத் திற்கு இடம் அளிக்கும் வகையில் சாட்சியமாய் அமைகிறது. வாலி வழக்கில் மற்ருெரு பிரதான சாட்சியமாக அமைந்துள்ளது அனுமன் கூற்று ஒன்றுதான் இராமனிடம் ருமையைப் பற்றிக் குறிப்பிட்டவன் அனுமன் ஆவான். அவனும் வாலி சுக்ரீவனுக்கு உரிமையான தாரத்தை வௌவினன் என்றுதான் மேல் எழுந்த வாரி யாகக் குறிப்பிட்டுச் சொல்வான். வௌவினன் என்பதற்கு விரும்பினன், அபகரித்தான் எனப் பொருள் கொண்டால், அவர்கள் உறவில் பழுது இருந்ததாக எடுத்துக்கொள்ள முடியாது. வாலி சுக்ரீவனே அச்சுறுத்துவதற்காகச் சிறை எடுத்திருக்கலாம் அல்லது ரிஷிமுக பர்வதத்தில் போய் புகுந்த சுக்ரீவனே அங்கிருந்து வெளியே வரவழைக்க ஒரு தூண்டும் கருவியாக இருக்கட் டும் என்று ருமையை சிறை எடுத்திருக்கலாம். அவ்வாறின்றி அவளே அனுபவிப்பதற்காகவே சிறை எடுத்தான் என்ருே - அனுபவிக்கவும் செய்தனன் என்ருே காப்பியத்தில் சாட்சியம் வலுவானதாக அமையும் வகையில் காணப் படவில்லே. வாலி, ருமை உறவு பற்றி சுக்ரீ வன் ஏதுமே புகன்ருனில்லே. அவளே மீட்கக் கருதியிருந்ததாக, முயற்சித்ததாக காணப்பட வில்லே. வாலி இறந்த பிறகு அவள் ஒரு குற்ற மும் தவறு புரியாதவளாகவே அவனுல் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிருள். எனவேதான், எந்த அளவுக்கு அனுமன் சாட்சியத்தை அவன் பெரு மை குறித்து ஏற்றுக்கொள்ள முற்படுகிருே மோ, அதே அளவுக்கு தாரையின் சாட்சியத்தை யும் அவள் பெருமை, அவள் புலம்பல், அவளும் வாலியும் வாழ்ந்த இணேந்த வாழ்வின் அடிப் படையில், வாலி மீது சுமத்தப்படும் பிறன் மனே நயந்தான் என்கிற குற்றச்சாட்டு முழுவதுமாய் சந்தேகமற நிருபணம் ஆகாத, முடிவுக்கு வர முடியாத காரணத்தால் அடிபட்டுப் போகிறது. அதற்காக நாம் வாலி மீது பெரிதும் இரக்கப் படுகிருேம். தாரையின் புலம்பலால் வாலி நம் மனதில் இடம் பிடித்து இராமன் செய்கைக்கு விளக்கம் கோரும் நிலேக்கு உட்படுத்தப்படுகி ருேம் என்பதும் கவனிக்கத் தக்கதாம்.

கற்பின் சிகரமாம் மண்டோதரி, தன் கண வன் பிற மாதரிடம் - சீதை மேல்வைத்த ஆசை யால் அவதிப்பட்டாயே எனக்குறிப்பிடுவதும், கண்ணகி, மாதவியால் மையல் கொண்டிருந்த தன் கணவன் கோவலனே, கூடா ஒழுக்கம் புரிந் தீர் என எடுத்துக் காட்டுவதும், தாரை அவ் வாறு எதுவும் தன் கணவனேப் பற்றிக் குறிப் பிடாமல் இருப்பது ஒன்று அவள் உயர்வின் காரணமாக இருக்கலாம் அல்லது வாலி அம் மாதிரி எந்த தவற்றினேயும் புரியாதவனுக இருந்திருக்கலாம் என்றே முடிவு கட்ட வேண்டி யுள்ளது.

காப்பியத்தில் தாரையைப் பற்றிக் குறிப் பிடப்படும் மூன்ருவது காட்சியில் அவள் மீது நமக்கு அளவற்ற மரியாதை உருவாகிறது. கணவனே இழந்த தாரை, ஆறுதலடைந்து, கைம்மை விரதம் பூண்டு, தன் கவலேயை மறக்

கும் வண்ணம் அங்கதன் முன்னேற்றத்தில் கவனம் செலுத்தியவளாக வாழ்ந்திருக்கிருள்.

கார்காலம் முடிந்ததும், சுக்ரீவன் வாக்களித்தபடி பிராட்டியைத் தேடிக்காண வானர சைன்யங்களுடன் வராமையால், இராமன், இலக்குவனை விவரமறிந்து வரவும், சுக்ரீவனைக் கண்டித்து வரவும் கிஷ்கிந்தைக்கு அனுப்பி வைத்தான். இலக்குவனும் சுக்ரீவனது அரண்மனையை நோக்கி சீற்றங்கொண்டு விரைந்து சென்ருன். அவனது வேகத்தையும் கோபத்தையும் கண்ட வானரர்கள் செய்வது இன்னதென்று அறியாமல் மலைகளை அடுக்கி மாளிகை வாயிலை அடைந்தன. இலக்குவன் இதனுல் மேலும் சீற்றம் கொண்டு அம்மலைகளை தன் காலால் உதைத்து அகற்றி மேலே நடந்தான். வானரங்கள் பயந்து நடுங்கி, பல திசைகளிலும் பாய்ந்து ஓடின. இதைக் கண்ட அனுமன் இலக்குவனது கோபத்தை எவ்வாறு மாற்றலாம் என்று எண்ணிப் பார்த்து அதற்குத் தாரையே தகுதி வாய்ந்தவள் எனத் துணிந்து, தாரையை அணுகி, இலக்குவன் வெம்மையை நீங்கள்தான் தக்க மொழிகளில் மாற்ற வேண்டும் என்று அன்போடு மொழிந்து, தாரையை வேண்டினன்.

தாரையும் அவ்வாறே செய்ய இசைந்து, தன் தோழியருடன் இலக்குவன் வரும் வழியை நோக்கிச் சென்ருள். இந்த இடத்தில் தாரையின் பெருமை பெரிதும் தெளிவாவதைக் காண முடிகிறது. எந்த அனுமன் தன் கணவனை வாலியைக் கொல்ல இராமனை அழைத்து வந்தானே, அவனே தன்னை நாடி வந்து, இந்த உதவி செய்யக் கோரியபோது அவள் மறுத்திருக்கலாம் அல்லது சுக்ரீவன் மேல் சினம் ஏற்படும் வகையில் இலக்குவன் கோபத்தை கிளறி விட்டிருக்கலாம். அவ்வாறு அவள் செய்தாள் இல்லை. மாருக, அவர்களிடம் அருள் கொண்டு, அவர்களுக்காக உதவி புரியவே முன் செல்கிருள். இந்தச் சூழ்நிலை அமைந்தபோது மட்டுமல்ல, வாலி இறந்தவுடன், அவள் நினைத்திருந்தால், நிறை அரசை ஆண்ட வாலியின் ஆட்சியின்போது எல்லா நலன்களும் வாழ்வும் பெற்றிருந்த வானரங்களின் துணைகொண்டு, சுக்ரீவனுக்கு இடைஞ்சல் விளைவித்திருக்கலாம். அவ்வாறும் அவள் செய்தாள் இல்லை. தன் உயிர் போகும்போது, தன் தம்பிக்காக இராமனிடம் பரிந்து பேசிய தன் கணவன் வாலியைப்போல, அவன் இறந்த பிறகு, இவளும் சுக்ரீவனுக்கு உதவிடவே செல்கிருள். சிறியன சிந்தியாதானுக்கு பொருந்துற அமைந்த சிறியன சிந்தியாத கற்பின் செல்விதான் தாரை என நம்முடைய மதிப்பிலும் மரியாதையிலும் ஓங்கி நிற்கிருள்.

தாரை மதி போன்ற முகமும் மயில் ரத்த சாயலும் வாய்ந்த தோழியருடன் வந்ததைக் கண்டபோது இலக்குவன், சிறிது கோபம் தணிந்து, திகைத்துப் போய், மாமியார் இடையே வந்த மருமகன் போல நாணத்தால் தலை கவிழ்ந்து நிற்கிருன். அப்போது தாரை, அவன் வந்த காரியம் அவளுக்கு நன்கு தெரிந்திருந்தும் அதனை மாற்ற வேண்டியே இடையில் வந்திருந்தும், ஏதும் தெரியாதவள்போல், தன் பெண்மையால் மெய் நடுங்க, ''தவஞ் செய்வார்க்கும் இந்திரன் முதலானேர்க்கும் எளிதில் கிட்டாப் பாதங்கொண்டு எம் மனை வர, நாங்கள் என்ன பாக்கியம் செய்தோம். எம் இரு வினையும் தீர்ந்து உய்ந்தனம்'' என முகமன் கூறி வரவேற்று, இசையிலும் இனிய சொல்லாளான தாரை, மேலும் ''எப்போதும் அஞ்சன வண்ணனேடு இணைபிரியாது இருக்கும் நீர் இப்போது அவரைப் பிரிந்து தனியாக வந்த தன்மைதான் என்ன?'' எனக் கேட்டாள். (இவ்வுரையில் உள்ள விநயமும் பேசும் திறனும், புகழுரைத்த வகையும், தயரதன் அவையில் விசுவாமித்திரன் முதன் முதலில் வரவேற்கப்பட்டபோது அவன் பேசிய பேச்சினை நினைவுறுத்துகிறது அல்லவா!)

இலக்குவன் அவ்வுரையைக் கேட்டவுடன் அவன் உள்ளத்தில் அருள் நிரம்பியது. சீற்றம் தணிந்தது. இதுவரை குனிந்திருந்த தலையை நிமிர்த்தி, இவ்வாறு இனிமையாய் உரை செய்த பெண்மணி யாரென அறியும் ஆர்வத்தில் பார்க்கிருர். பகலில் தோன்றிய முழுமதி போன்ற தாரையின் கைம்மைக் கோலத்தை நோக்கியதும் அவன் கண்களில் நீர் நிறைந்தது. இப்படித்தான் தன் தாயாரும் கைம்மைக் கோலம் பூண்டிருப்பர் என்னும் நினைவினல் நயனங்கள் பளிப்பு நின்ருள் என்கிருன் கம்பன்.

''மங்கல அணியை நீக்கி, மணி அணி துறந்து, வாசக்
கொங்கு அலர் கோதை மாற்றி, குங்குமம் சாந்தம் கொட்டாப்
பொங்கு வெம் முலைகள், பூகக் கழுத்தோடு மறையப் போர்த்த
நங்கையைக் கண்ட வள்ளல், நயனங்கள் பனிப்ப நைந்தான்''

''இணையர் ஆம், என்னை ஈன்ற இருவரும்' என்ன வந்த
நினைவினுல் அயர்ப்புச் சென்ற நெஞ்சினன் நெடிது நின்ருன்;
'வினவினுட்டு எதிர் ஓர் மாற்றம்
விளம்பவும் வேண்டும்' என்று அப்
புனை குழலாட்டு வந்த காரியம் புகல்வது ஆனுன்:''

(இங்கும் 13 ஆண்டுகளுக்கு முன் சித்திரக் கூடத்தில் கண்ட அவன் தாயார் நினைவு வருகிறதாம். கைகேயினை நினைத்தான் இல்லை என்று, 'என்னை ஈன்ற இருவரும் இணையர் ஆம்' என்கிற கருத்தினின்றும் அவள் மேல் கொண்ட ஆத்திரம் வெளிப்படுவதைக் காணலாம்.)

வந்த காரணம் வினவிய தாரைக்கு, எதிர் மாற்றம் விளம்பவும் வேண்டும் என்கிற நினைப்புடன் அப்புனை குழலாட்கு வந்த காரியத்தைச் சொன்னுன்.

''சேனையும் யானும் தேடித் தேவியைத் தருவென்'' என்று
மானவற்கு உரைத்த மாற்றம் மறந்தனன், அருக்கன் மைந்தன்;
'ஆனவன் அமைதி வல்லை அறி' என, அருளில் வந்தேன்
பேல் நிலை அணியான் செய்கை வினைந்தவா விளம்புக!' என்ருன்.

அதைக் கேட்ட தாரை, சுக்ரீவன் படைகளைத் திரட்டி எல்லா திசைகளிலும் தூதர்களை அனுப்பியுள்ளான் என்றும், விரைவிலேயே படையுடன் தங்களை வந்து சந்திப்பான் என்றும், இன்னும் வரவில்லையே என சினந்திடல் வேண்டாம் என்றும் பணிவுடன் கேட்டுக் கொண்டாள். நன்றி மறத்தலின் கேட்டையும், இராமபிரானின் வாளியின் வலிமையையும் மறந்து விடவில்லை எனப் புகன்று, ஆதரவற்று அச்சமுற்று வாழ்ந்த சுக்ரீவனுக்கு அபயம் அளித்து அரசுரிமையும் அளித்த பேருதவிக்கு உயிரைக் கொடுத்தல் உரியது அன்ருே! பெருமை சான்ற உமது நன்றியை மறந்தார் ஆனுல் இருமைப் பலனையும் இழந்து இன்னல் உழைப்பர் அன்ருே! எனவும் எடுத்துரைத்தாள்.

இலக்குவன் அவ்வுரை கேட்டதும், அருளும் நாணமும் அடைந்தான் சுக்ரீவன் மீது கொண்ட சினத்தை அகற்றினுன். இவ்வாறு அவன் வெம்மைத் தணிந்த பின்னர்தான், அனுமன் கூட அவன் அருகில் செல்லும் மனத்திறல் பெற்ருன் என்ருல் தாரையின் பெருமை, அவள் செய்த உதவியின் மகத்துவம் எடுத்துரைக்க பாலதோ! மாற்ருரின் மனப்பான்மையை தம் மனதில் உணர்ந்து, அதற்கு ஏற்ற வகையில், இன்னுரை வழங்கிய தன்மையும் - உரையை முறைப்படி அமைத்துப் புகன்றதும் பேச்சின் அனுகு முறையும், தாரையின் குரலிலே இனிமை, இசை நயம், பேச்சிலே விநயம், சொல்லும் திறனிலே பண்பு, எடுத்துரைக்கும் விவேகம், தோற்றத்திலே ஒரு பரிவு இவை யாவுமே,தாரையின் பால் நமக்கு அளவு கடந்த மரியாதையை ஏற்படுத்துகின்றன. (தேவா! நின்கழல் சேவிக்க வந்தனன் எனக் கூறிய குகனை நன்கு உணர்ந்து அவனை தாயின் நல்லான், உள்ளம் தூயவன் என மதிப்பிட்ட இலக்குவன், இங்கே தாரையின் உரையையும் தோற்றத்தையும் அடுத்து அவள் மீது அதே மாதிரியாக பெரும் மதிப்பிட்டதும் நினைவில் கொள்ளத் தக்கதாம்)

கம்பனின் தாரை, ஒரு மகோன்னதமான பாத்திரப் படைப்பாகும். அவன் படைத்த சிறு பாத்திரங்களுள் அவள் ஒரு அற்புதமான படைப்பு. அவள் ஒரு காவியம். தாரை ஒரு தனித்தன்மையோடு முற்றிலுமாய் சிறந்து விளங்குகிருள். மகா பாரதத்தில் இடையில் வரும் ராம காதையில் குறிப்பிடப்படும் தாரை கூட வான்மீகத்தில் உள்ளவாறே சுக்ரீவனுடன் சேர்ந்து வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது. வான்மீகத்தின் தாரையோ மனதில் பதியும் வண்ணம் இல்லவே இல்லை. வாலி மறைவுக்குப் பிறகு அவள் வாழும் விதத்தைப் படிக்கும் போதே அருவெறுப்பு ஏற்படவும் செய்யும். காளிதாசர் தாரை பற்றி ஒன்றுமே கூறவில்லை. துளசிதாசர் கம்பன், வான்மீகி இருவர் வழியிலும்

தாரையை சித்தரித்துள்ளார் -ஆனால் கம்பனின் தாரையின் பேச்சுக்களிலே அனுமனின் நயத்தையும் திறனையும் காணலாம். கம்பனின் தாரை கற்பின் செல்வி என்பதோடு அவள் ஒரு சொல்லின் செல்வியே என்றும் புகழலாம்.

கம்பனின் தாரை, சிறிதும் மாசு மறுவற்ற ஒரு கற்புடைய பெண்மணி. அவள் புறத்தோற்றத்திலும் சரி அகத் தோற்றத்திலும் சரி ஒரு மானிடப் பெண் போலவே கம்பன் காட்டுகிறான். காப்பியத்தைப் படிக்கும் போது தாரை ஒரு மானிடப் பெண்ணே என்கிற எண்ணம் தான் நமது மனதில் தோன்றுகிறது. அவள் தோற்றத்தைப் பற்றி பலவாறாகக் கூறுகிறான் கம்பன். 'தன்னெடுங் கூந்தல்' உடையாள் என்றும் 'விரை குழல் அன்னாள்' என்றும் அவள் கூந்தல் அழகையும் நீளத்தையும் காட்டி, 'மலைக்குல மயில்' எனச் சொல்லி அவளுடைய சாயலைச் சுட்டிக்காட்டி,'வேயிடைத் தோளினால்' என்று அவளுடைய தோள் அழகை வருணித்து 'வேல் விழித்தாரை' 'நெடுங்கண் தாளர்'என்று அவள் கண் அழகையும் உயர்த்திக் காட்டி கம்பன் அவள் புறத்தோற்றத்தை வர்ணித்துள்ளான். அவள் குரலோ (புலம்பும் போது கூட!) புல்லாங் குழலின் ஒசையும் யாழின் ஒசையும் வீணையின் ஒலியும் வெள்கும்படி இருந்ததாம். மயில் இவள்; குயில் மொழியாள் என்பான் வாலி. இசையினும் இனிய சொல்லாள் என்பான். அவள் குரல் ஒசையினைக் காட்ட கம்பன் அவளைப் பற்றி படிக்கும் போது அவள் ஒரு குரங்கினத்தைச் சார்ந்தவள் என்கிற நினைப்பே நமக்கு எழுவதில்லை. கைம்பெண் கோலம் பூண்ட தாரை ஒரு மானிடப் பெண்ணாகவன்றோ பிரதிபலிக்கிறாள் !

காப்பியத்தில் தாரை தோன்றும் முதற்காட்சியில், அவளை ஒரு சிறந்த இல்லத்தரசியாகவும் மதி நுட்பம் அமைந்த அமைச்சராகவும், இரண்டாம் காட்சியில் கணவனிடம் பாசம் மிக்க வாழ்க்கைத் துணைவியாகவும், மூன்றாம் காட்சியில், இலக்குவன் முன் வந்து இடைப்பட்ட போது 'தூமன நெடுங்கண் தாரை, நடுங்குவாள், இனைய சொன்னாள் என்பதின் மூலம் பிற ஆடவர் எதிரில் வந்து நிற்கக் கூசும் அவளை கற்பில் உயர்ந்தவளாகவும் பேச்சுத் திறனில் அனுமனுக்கு அடுத்தபடியாக கற்பின் தன்மையில் மண்டோதரியைக் காட்டிலும் உயர்ந்து, தன் கணவனை தடுப்பதிலும் அவனை ஏதும் பழித்துக் கூறாமலிருப்பதிலும் (அப்படி ஒருக்கால் வாலி பிழையே புரிந்திருந்தனன் என்றாலும்!) சித்தரிக்கப்பட்டிருக்கிறாள்.

வான்மீகத்தில் வரும் தாரையை நன்கு படித்து காப்பியப் போக்கை உள்ளத்தில் நிறுத்தி சீர்தூக்கிப் பார்த்தால் தான் கம்பனின் காப்பியத்திறன், கவிதா மேன்மை தெளிவாகப் புரியவரும். அறிவுத் திறனில் கைகேயிக்கு அடுத்தவளாக, அரசியல் ஈடுபாட்டில் அவளுக்கு எந்த விதத்திலும் சளைக்காதவளாகவும் சுடர் விட்டுப் பிரகாசிக்கிறாள்.

ஆன்மநேய ஒருமைப்பாட்டை — உலகப் பொது சகோதரத்துவத்தை மனிதரிடையே, விலங்குகளிடையே, அரக்கரிடையே அமைத்து, உணரச் செய்த கம்பன், கற்பின் மேன்மையை கற்பின் கனலியாம் சீதையிடம் மட்டும் உயர்த்தி காண்பிப்பதோடு நில்லாமல் மானுடத்தினிடையே நிலவிய கற்பின் திறன் விலங்குகளிடையேயும் அரக்கரிடையேயும் நின்று நிலவியது என்று காட்டக் கருதியவனாய், தாரையை படைத்திருக்கிறான் என்பது நன்கு அறிய முடிகிறது. சீலம், ஒழுக்கம், கற்பு இவை இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, அறிவு படைத்த அனைத்து இனத்திலும் இருத்தலை விரும்புவான் போல அதன் பெருமையைப் பல்வகைப் பாத்திரங்களிடையே கம்பன் புகுத்தியதின் விளைவே இந்தப் புடம் போட்ட தங்கமென மின்னிடும் தாரையின் பாத்திரம்.

கம்பன் வாழ்க — கம்பன் புகழ் வாழ்க — கன்னித் தமிழ் வாழ்க. கம்பனடிப்பொடி தம் சீர் நாமம் வாழ்க.

கம்பன் கண்ட கொடியோர்

அமரர் சா. கணேசன், திருச்சி வானொலியில் 17-1-1950ல் ஆற்றிய உரை

சூர்ப்பனகை

அன்புள்ள மாணுக்கர்களே, கவிச்சக்கரவர்த்தி கம்பனையும், அவன் தமிழர்க்குச் செய்த பேருப காரத்தையும் நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். நாம் தமிழரென்று பெருமையுடன் சொல்லிக் கொள்ள ஒரு பெரும் காரணமாக இருப்பது, கம்பன் என்ற கவிதைத் தச்சன் கட்டித் தந்த ஒப்பற்ற காவியக் கோவிலே. அதுதான் கம்ப ராமாயணம். அது ஒரு பார காவியம். அங்கே எத்தனை எத்தனையோ பண்புகளுடன் கூடிய பாத்திரங்கள் நூற்றுக் கணக்கானவர்களை நாம் சந்திக்க முடியும்.

அறவோரும்—மறவோரும், நல்லோரும்—தீயோரும், பெரியோரும் — சிறியோரும், விராதி வீரர்களும் — வெறும் அப்பாவிகளும், இந்தக் காவியக் கோவிலிலே வீற்றிருக்கக்காண லாம். அப்படியே, இனியோர் பலரையும், கொடியோர் பலரையும், அங்கு நாம் சந்திக் கலாம். தாடகை, கூனி, சூர்ப்பனகை, மகோ தரன், ராவணன், இரணியன் போன்ற பல கொடியவர்கள் அந்தக்காவியப் பூங்கோவிலிலே காணக் கிடைப்பவர்கள். இப்பொழுது நாம் அவர்களிலே சூர்ப்பனகையை ஒரு அளவு தெரிந்து கொள்ளுவோம்.

சூர்ப்பனகை என்பது யார். அவள் ஒருபெண். இலங்கேசனுன இராவணனின் தங்கை. இவ் வளவுதான் நமக்குத் தெரியும் இல்லையா? கம்பனைக் கேட்போமா இவன் யாரென்று? சரி, அவன் சொல்லுவதைக் கேளுங்கள்.

''நீல மா மணி நிருதர் வேந்தனை
மூலநாசம் பெற முடிக்கும் மொய்ம்பினுள்''

என்ன, பெரிய கரு - நீல மணியைப் போன்ற நிறத்தோடு விளங்கும் அரக்கர் கோமகனுகிய இராவணனை வேருெடும் தொலைத்துக் கட்டக் கூடிய பேராற்றல் வாய்ந்தவள் இவள் என்றல்லவா அறிமுகப் படுத்துகிருன். ஆம். அவன் சொன்னதன் உண்மையை பாத்திரத் தைத் தொடர்ந்து சென்று கண்டறிவோம். நாம்.

கம்ப ராமாயணம் ஆறு காண்டங்களாக, அதாவது ஆறு பெரும் பகுதிகளாக உள்ளது. அதில் மூன்ருவதான ஆரணிய காண்டத்தில் தான், சூர்ப்பனகையைச் சந்திக்கும்படி செய் கிருன் கம்பன். ராமன் தர்ம பத்தினி சீதையுட னும், தம்பி லெட்சுமணனுடனும் பஞ்ச வடியிலே தங்கியிருக்கிருன். அப்பொழுதுதான் வருகிருள் சூர்ப்பனகை, வந்தவள் அங்கே தனி யனுய் ஒரு பேரழகன் அமர்ந்திருப்பதைக் கண்டனள். அப்படிக் கண்டவள் யார் எனக் கம்பன் கூறுவதை யார் எனக் கம்பன் கூறுவ தைக் கேளுங்கள். ''கண்டனள் தன் கிளைக்கு இறுதி காட்டுவாள்'' கண்டவள் யார் தெரியுமா அவள்தான் தன்னுடைய சுற்றத்தார்கட்கு முடிவு காலத்தைக் காட்டக் கூடியவள் என்று விளங்கவைக்கிருன் கவிஞர். ரொம்பச் சரி. கண்டவள் மற்றவற்குக் காட்டவேண்டும் அல்லவா? எப்படி அந்தத் திருப்பணியை இந்த அம்மையார் நிறைவேற்றி வைக்கிருள் என்ப தை கம்பன் எவ்வளவு அழகாக, நாடகலங்காரத் தோடு சித்தரிக்கிருன் என்பதைப் பார்ப்போம்.

கண்டனள் ராமனை. கண்டதும் காதல் கொண்டுவிட்டாள். எப்படியும் இந்தப் பேரழ கனை எனது கணவனுக அடைந்தே தீருவேன். இவனை அடையாமல் இந்த ஜன்மம் இருந் தென்ன போயென்ன. என உள்ளம் உருகு கின்ருள். உடல் வெதும்புகின்ருள். ஆ. இந்தப் பேரழகன், புருஷோத்தமன், என் தோற்றத் தைப் பார்த்தால் கோரப் பற்களுடன் கூடிய இந்த ராக்ஷஸி, சகல விதமான மாமிசங்களையும் புசிப்பவள். ஆகவே நமக்கும் இவளுக்கும் கட்டி

வராது என்று ஒரு கால் மறுக்கவும் கூடும். ஆதலால், குயில் போன்ற குரலும், சிவந்த வாயும், மயில் போன்ற சாயலும் பெற்று மீண்டும் இவ்விடத்திற்கு வருவதுதான் புத்திசாலித் தனம். அதுதான் காரியம் கைகூட ஏற்ற உபாயமாகும். என்று எண்ணுகிருள். அப்படியே செய்வேன் என்று முடிவு கட்டிக்கொண்டு செல்லுகிருள் ஒரு மறைவிடத்திற்கு. அங்கே போய் அமர்ந்து, தனக்கு மிகவும் பழக்கமான மந்திரத்தைச் செபித்து, லெக்ஷ்மி தேவியை நோக்கிப் பிரார்த்தனை செய்கிருள். பலன் கிட்டி விடுகிறது. மதி முகமும், அதற்கேற்ற பேரழகு தங்கிய உடலுறுப்புகளும் பெற்று தேவ மங்கை போல வருகிருள். அவள் வருகிற ஒய்யாரத் தைப் பாருங்கள்.

பஞ்சிஒளிர் விஞ்சு குளிர் பல்லவம் அனுங்க
செஞ்செவிய கஞ்சம்நிமிர் சீறடியள் ஆகி,
அஞ்சொல்இள மஞ்ஞைஎன, அன்னம்என மின்னும்
வஞ்சிஎன, நஞ்சம்என, வஞ்சமகள் வந்தாள்.
காணின்உயர் கற்பக உயிர்த்த கதிர்வல்லி
மேனிநனி பெற்றவினை காமநெறிவாசத்
தேனின்மொழி உற்றினிய செவ்விநனி பெற்றேர்
மானின்விழி பெற்றுமயில் வந்ததென வந்தாள்.

என்ன படாடோபம் பார்த்தீர்களா. தான்கண்டு வெறிகொண்ட ஆடவனை அடைந்து ஆனந்திக்க, இல்லாத சிறப்புக்களை எல்லாம் மந்திரம் என்னும் மேக்கப் பூச்சுக்களால் ஆக்கிக் கொண்டு வருகிருள். பாதசரம், மேகலாபரணம், மணிவடங்கசுந்தலில்உள்ள மலர்களில் மொய்க்கும் வண்டுகள், இவைகள் ஒலிக்கும் மெல்லோசையைக் கேட்ட ராமன், என்ன யாரோ ஒரு பெண் வருவது போலிருக்கிறதே என அத்திசை திரும்பினன். கண்டான் அழகே உருவாய் அமைந்த ஒரு பெண்மகளை. ஆச்சரியம் தாங்க முடியவில்லை. என்ன அழகு. இவள் யார் அழகிற்கு ஒப்பும் உண்டோ என்று எண்ணினன். பேஷ். பறவை வலைக்குள் அகப்பட்டுவிட்டது என்ற நம்பிக்கையுடன் ராமன் திருமுன்னர் வந்து அவனடிகளிலே கரம் சேர்த்து வணங்கி, தனது கண்கள் என்னும் அஸ்திரங்களை பிரயோகித்துவிட்டு நாணிக் கோணி ஒரு பக்கத்தில் ஒதுங்கி நின்ருள்.

ராமனுக்கு ஒன்றும் புரியவில்லை. இருந்தாலும் தமிழர் பண்பாடு என்று ஒன்று இருக்கிறதல்லவா அதற்கேற்ப ராமன் முகமன் கூறி வரவேற்கிருன். இவ்வளவு பேரழகியாகிய உன் வருகை தீமையற்றதாக அமையட்டும். வெகு தூரத்தில் உள்ளவர்களாகக் காணப்படுகிறீர்கள். உங்களை வரவேற்று உபசரிப்பது எங்கட்கு ஒரு பாக்கியமே. தங்கள் ஊர் எதுவோ பேர் என்னவோ எக்குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எனக்கேட்டான் ராமன். சூர்ப்பனகை அளக்கத் தொடங்கிவிட்டாள் தன்னுடைய பெருமைகளை எல்லாம்.

நான் சாக்ஷாத் பிரம்மாவுக்குப் பேரன் மகளாக்கும். சிவபிரானுடைய தோழனை குபேரனுக்கும் எட்டுத்திசையும் நடுங்க திக்-கஜங்களை எல்லாம் தொலைத்து, வெள்ளியங்கிரியை வேரோடு கல்லி, திரிலோகமும் ஏக சக்ராதிபத்தியம் நடாத்தும் இராவணேச்வரனுக்கும் தங்கை தான். என் பெயர் காமவல்லி. எனக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லை என்று அளந்துவிட்டாள். கேட்டனன் ராமன், சந்தேகப்பட்டான். இவள் செயலைப் பார்த்தால் சரியாகப்படவில்லை. இருந்தாலும் உண்மையைக் கண்டறிய வேண்டும் என்று கருதிய ராமன் அம்மா, தாங்கள் கூறிய படி தாங்கள் ராவணன் தங்கையானல் உருவம் எப்படி இப்படியாயிற்று? காரணம் தெரிவிப்பீர்கள் என்று நம்புகிறேன் என்று நாசுக்காக வாயைக் கிண்டினன். பதில் உடனே வெளிப்படுகிறது கேளுங்கள். மகா சூழ்ச்சிக்காரர்களாக உள்ள இந்த அரக்கர்களுடன் வாழப் பிடிக்கவில்லை. ஆகவே தெய்வத்தை நோக்கிச் செய்த பெருந்தவப் பயனல் என் பாவமெல்லாம்போய் இந்த நல்லுடம்பு பெற்றேனையா என்று எவ்வளவு அழகாகப் புழுகுகிருள் பார்த்தீர்களா. இப்படியே ராமன் கேட்கும் ஒவ்வொரு கேள்விக்கும் மிக சாமர்த்தியமாகப் பதில் கூறுகிருள். சீதையின் பேரழகு சூர்ப்பனகையைத் திகைக்க வைத்துவிட்டது. என்ன பேரழகு; பெண்ணுகப் பிறந்த என்னையே சீதையின் பேரழகு இவ்வளவு கலக்கு கலக்கினல் மற்றவர்கள் பாடு என்னுகும் என்று ஒரே திகைப்புக் கடலுள் மூழ்கியிருந்தவள் ஒருவாராய்த் தன் நினைவு

பெற்று ராமனைப் பார்த்துப் பேசுவதைக் கேளுங்கள்.

ஐயா இவள் ஒரு மாயா ஜாலம் வல்ல பொல்லாத ராக்ஷஸியாவாள். இவள் தாங்கும் இந்த உருவம் வெறும் வேஷம். இவள் மாமிச பக்ஷினி இவளைக் கண்டால் எனக்கு ஒரே பயமாக இருக்கிறது. ராமன் பதில் என்ன என்பதையும் தொடர்ந்து கேளுங்கள்.

பேஷ், பேஷ். உன் எண்ணம் நன்ருகப் புரிகிறது நப்பன் குதிருக்குள் இல்லை என்று சொல்லும் உன் வண்டவாளம் நன்ருகத் தெரிகிறது அம்மா, இவள் யாரென்பதை நீ தெரிந்து கொள் என்று சொல்லிச் சிரிக்கும் ராமனின் நகையொலி கேட்கிறதா உங்கட்கு.

இப்படியே வளர்ந்த பேச்சு சூர்ப்பனகை யார்? அவள் இங்கே வந்ததன் நோக்கம் என்ன என்பதையெல்லாம் ராமனுக்கு மிக நன்ருய்ப் புலப்படுத்தி விட்டது. சரி, இனி விளையாட்டு வினையாகிப் போய்விடும் என அஞ்சிய ராமன் சீதையை அழைத்துக் கொண்டு பன்னகசாலைக்குள் போய்விடுகிருன்.

சரி, இன்று நம் ஜம்பம் இவனிடம் சாயாது என்று திரும்பிவிடுகிருள். தன் இருப்பிடம் சேர்ந்து ராமனை எப்படி அடைவது என்று எண்ணி எண்ணி ஏங்கிக்கொண்டே விரகதாபத்தால் வேகின்ருள். கண்டுவிட்டாள் ஒரு வழி. சீதை போன்ற ஒரு அழகி ராமனகூட இருக்கும் வரை ராமன் நம்மைத் திரும்பியும் பார்க்க மாட்டான். ஆகவே அவளை ஒழித்துக்கட்ட வேண்டும் என்ற முடிவுக்கு வருகிருள். பொழுதும் விடிந்து விடுகிறது. மறுநாள் வேக வேகமாக வருகிருள், ராமன் இருப்பிடத்தை நோக்கி. ஆத்திரக்காரிக்கு புத்தி மட்டுத்தானே. ராமன் ஆற்றங் கரையிலே காலை வழிபாடு செய்து கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு இதுதான் தக்க சமயம் சீதையைக் கபளீகரம் செய்வதற்கு என்று பன்னகசாலையை நோக்கித் திடுதிடு என்று ஓடுகிருள். பக்கத்திலே மரச்சூழல் மத்தியிலே வீரத் தம்பி லெட்சுமணன் இருப்பதைக் கவனிக்கவே இல்லை. கேட்பானேன், லெட்சுமணன் கோபக் கனல்கக்க நில் நில் என இரைச்சல் போட்டுக்கொண்டே மிக வேகமாகச் சென்று சூர்ப்பனகை கூந்தலைப் பற்றியிழுத்து வந்து மூக்கு முதலியவற்றை அறுத்தெரிந்து விரட்டி விடுகிருன். சூர்ப்பனகை மூக்கறுபட்ட மூளியாகக் கதறிக் கொண்டே ஓடுகிருள். கானகத்தே இருந்த கரன் இவள் கஷ்டம் அனைத்தையும் அறிகிருன். பெரும் படை திரட்டிக் கொண்டுவந்து ராமனுடன் பொருதுகிருன். பெரும் போர் நடக்கிறது. முடிவில் கரனும் அவனுடன் வந்த தூடணன் முதலிய அனைவரும் பிணமாகி விடுகின்றனர். விட்டாளா சூர்ப்பனகை. எப்படி விடுவாள். நிருதர் வேந்தனை மூல நாசம்பெற முடிக்கும் திருப்பணிக்கென்றே உருப்பெற்று வந்தவளல்லவா. நேரே செல்கிருள் இலங்கைக்கு. அண்ணனை, ஆம் இராவணனைத்தான் காணுகிருள், மிகச் சாமர்த்தியமாகக் கயிறு திரிக்கிருள். நீங்களே கேளுங்கள் அதை.

அண்ணு, காட்டிலே யாரோ இரண்டு மனிசன்கள் வந்திருக்கிருர்கள், அவர்களோடு ஒருத்தி கூட இருக்கிருள். அவளைப்பற்றி நான் என்னத்தைச் சொல்ல; தாமரை மலரை விட்டு அந்தச் சீதேவிதான் பூமிக்கு வந்திருக்கிருள் என்று சொல்லலாமா; சேச்சே. அவள் இவளுக்குச் சேடியாக இருக்கவும் தகுதியில்லாதவள்.

மஞ்சொக்கும் அளகதி.
மழை ஒக்கும் வடித்த கூந்தல்.
பஞ்சொக்கும் அடிகள் செய்ய.
பவளத்தின் விரல்கள் ஐயா
அம்சொற்கள் அமுதத்தில்
அள்ளிக் கொண்டாள் வதனம் மைதீர்
கஞ்சத்தின் அளவிற்றேனும்
கடலினும் பெரிய கண்கள்.

மன்மதனை ஈசன் நெற்றிக் கண்ணுல் அழித்துவிட்டான் என்கிருர்களே அது முட்டாள்தனமான பேச்சு. இவளைப் பார்த்தான்; காதல் நோய் கரை கடந்துவிட்டது. ஆறமுடியவில்லை. பேச்சில்லை, மூச்சில்லை. அந்த ஆசையே அவனை அரித்துத் தின்றுவிட்டது. எந்த உலகத்திற்குத்தான் போய்ப் பார். எந்த ஓவியனும் இவள் உடலுறுப்பை எழுதிவிடுகின்ருனு என்றுபார்க்சுலாம். ஐயோ இவள் அழகிலே மயங்கிய நான்

தோளையே சொல்லுகேனே,
சுடர் முகத்துலவுகின்ற

வாளையே சொல்லுகேனே,
வல்லவை வழுத்துகேனே,
மீளவும் திகைப்பதல்லால்
தனித்தனி விளம்பலாற்றேன்.
நாளையே காணடியன்றோ
நானுனக்கு உரைப்பதென்னே.

அவளை உனக்காக நான் தூக்கும்போதுதான் அந்தப் பயல், ராமன் தம்பி என்னை இக் கதிக்கு ஆளாக்கிவிட்டான் என்றுரைப்பது உங்கள் காதிலே விழுகிறதல்லவா.

இப்படியாக இராவணனுக்கு காமத் தீயை ரொம்ப நன்றாக மூட்டிவிட்டாள். பிறகு கேட்பானேன். இராவணனை காமத் தீ மிக நன்றாகப் பற்றிக்கொண்டுவிட்டது. அதன் பலன் தான் நமக்கெல்லாம் நன்றாகத் தெரியுமே.

மாய மானாக மாரீசன் உருவெடுக்க, அதைத் துரத்திக் கொண்டு ராமன் போக, மாரீசனின் மாயக் குரல் கேட்டு சீதையைக் காத்து நின்ற லெட்சுமணனும் பிரிந்துவிட அந்த சந்தர்ப்பத்தில் இராவணன் கள்ளத்தனமாக அன்னை ஜானகியை அபகரித்துச் சென்று விடுகிறான். கதை நமக்குக்குத் தெரிந்ததுதான். ராம—ராவண யுத்தம் பயங்கரமாக நடக்கிறது, அரக்கர் சேனை மட்டுமல்ல, அரக்கர் குலமே அற்றுப் போய் விடுகிறது, இறுதியிலே எஞ்சிய மக்களும் கூட நெருப்பிலே விழுந்து உயிரைப் போக்கிக் கொண்டு விடுகிறார்கள். அப்படி தீக் குளிக்கும் முன் ராவணன் உடலைக் கட்டிக் கொண்டு பிரலாபிக்கும் மண்டோதரியின் புலம்பலிலே அரக்கர் குலமழியக் காரணம் என்ன என்பதைக் கூறுகிறான் கம்பன். அதைக் கேளுங்கள்.

காந்தையருக்கு அணி அனைய ஜானகியார்
பேரழகும், அவர்தம் கற்பும்,
ஏந்து புயத்து இராவணனார் காதலர்
அச் சூர்ப்பனகை இழந்த மூக்கும்
வேந்தர்பிரான் தயரதனார் பணியினால்
வெங்கானில் விரதம் பூண்டு
போந்ததுவும் கடைமுறையே புரந்தரனார்
பெருந்தவமாய்ப் போயிற்று அம்மா.

கேட்டீர்களா மண்டோதரியின் பிரலாபத்தை. அந்த மகாபாபி சூர்ப்பனகை காட்டிலே ராமனைக் கண்டு காமவெறி கொள்ளாவிட்டால், அதன் காரணமாக மூக்கறுபடாவிட்டால், இந்தப் படுநாசம் ஏற்பட்டிருக்க மாட்டாதல்லவா? மகா கொடியவர்களின் தன்மை இதுதான். தான் மூக்கறுபட்டால் அதோடு அமைந்துவிட மாட்டார்கள், மற்றவர்களையும் தூபம் போட்டு விட்டு அவர்களுக்கும் கேட்டை விளைவிப்பார்கள், இல்லையா? இந்தப்பாவி பொறாமையாலும் பேராசையாலும் பற்ற வைத்த ஒரு பொறி நெருப்பல்லவா அரக்கர் குல முழுவதையும் அடியோடு சுட்டெரித்துச் சாம்பலாக்கி விட்டது. இல்லையா? இப்படிப்பட்ட கொடியோர் பலரையும் கம்பன் நமக்கு மிக நன்றாகக் காட்டுகிறான். தனது காவிய உலகத்திலே அவர்களையெல்லாம் நாம் ஆரஅமர இருந்து கற்றுக்கண்டறிய வேண்டும். சரிதானே? உங்கள் எல்லோருக்கும் வந்தனம்.

சகோதரர்கள்

அமரர் கம்பன் அடிப்பொடி. சா. கணேசன்
17-3-46ல் திருச்சி வானொலியில் ஆற்றிய உரை

ராமராஜ்யம்! அது ஒரு அற்புதம்! கேவலம் தோன்றிய சிறிது காலத்தில் மறைந்து போகும் அல்ப்பாயுஷ் ராஜ்யமா அது? இல்லை; அது கவியின் கனவு. ஆம்; மகாகவி கம்பனின் காவிய சிருஷ்ட்டி.

ஒரு ராஜ்யத்தில் இருக்க வேண்டிய சிறப்பியல்புகள் முழுவதையும் ராம ராஜ்யத்திலே காணலாம். எத்தனை எத்தனை காட்சிகள்! வெறும் கண்காட்சிகளா? இல்லை; உள்ளத்தைத் தொட்டு உணர்ச்சி ஒளி ஊட்டும் உண்மைக் காட்சிகள்!

அவற்றில் சிலவற்றை முன்னே கண்டோம். இனி அந்த ராஜ்யத்திலே சகோதரர்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதையும் கொஞ்சம் பார்க்கலாமா? சரி ராமராஜ்யத்தின் தந்தை தயரதன். மூன்று பட்டமகிஷிகளின் மூலம் அவனுக்கு நான்கு புத்திரர்கள். ராமன் பரதன் லெட்சுமணன் சத்ருக்னன் இவர்கள் தான் அந்த நால்வரும்.

இவர்களுள் ராமனும் லெட்சுமணனும் ஒரு கூட்டாளிகள். அப்படியே பரதனும் சத்ருக்னனும், இந்த இரண்டு ஜோடிகளும் என்றும் எங்கும் இணை பிரியாத ஜோடிகள்! அதனாலே தான் உலகத்தார் எல்லோரும் ராம — லெட்சுமணர்' என்றும் பரத சத்ருக்னர் என்றும் பிரித்து இணைத்துப் பேசுகிறார்கள் இல்லையா?

ராமன் காட்டுக்குப் போக வேண்டும் என்பது தானே கைகேசியின் கோரிக்கை. லெட்சுமணனும் ஏன் பின் தொடர்ந்தான்? ஒரு பசுவை வெளியே துரத்துகிறோம். அப்பொழுது கன்றுக்குட்டி மட்டும் வைக்கோற்போரைச் சுற்றிக் கொண்டே நிற்குமா என்ன? வெளியே ஓடும் பசுவைக் கன்றும் தொடருவது நமக்கு ஒரு ஆச்சரியமாகப் படுமா? இந்த உண்மை கம்பன் கருத்தில் ஊறிக்கிடக்கிறது. அதுவே பரதன் வாக்கிலிருந்து

''கன்றும் தாயும் போவன கண்டும் கழியீரே!''
என்று வெளிப்படுகிறது. அப்படி லெட்சுமணனையும் ராமனையும் கன்றையும் பசுவையும் போலப் பிணைத்து வைத்திருப்பது என்ன?

ராமனே தன் ஜீவன் என்று கருதுகிறான் லெட்சுமணன். ராமனின்றித் தானில்லை; ராமனைப் பிரிந்து வாழ்வது என்பதை லெட்சுமணனால் சிந்திக்கக் கூட முடியாது. அப்படி அவன் உள்ளம் ராமனுடன் அவனைப் பிணைத்து வைத்திருக்கிறது. இந்த உண்மையை லெட்சுமணனைக் கொண்டே சொல்லச் செய்கிறான் கம்பன். அதைக் கேளுங்கள்

''நீருள எனில் உள மீனும், நீலமும்''
அதைப் போல, அண்ணா!
நானும் சீதையும்
யார் உளர் எனில் உளேம்? அருளுவாய்''

கேட்டீர்களா? தான் மீனும், சீதை நீலோற் பல மலராம். ராமனாகிய தண்ணீர் இல்லா விட்டால் மீனும் நீலமலரும் வாழ முடியுமா? என்று எவ்வளவு பக்குவமாகச் சொல்லுகிறான் லெட்சுமணன் பார்த்தீர்களா?

அதனாலேயல்லவா ராமன் வனவாசம் போக வேண்டும் என்ற செய்தி கேட்டுக் கையால் நிலம் தடவிக் கண்ணீரால் மெழுகிக் கதறும் நகர மக்கள் கூட

''ஐயா! இளங்கோவே! ஆற்றுதியோ நீ''
என்று பொங்கிப் பொருமுகிறார்கள்.

சரி, ராமன் அக அழகைப் பார்ப்போம் இனி காடு உனக்கு; நாடு பரதனுக்கு'' என்றுரைக்

கும் கைகேகியின் கடுஞ்சொல் நமக்குக் கூட எவ்வளவோ கோபத்தையும் ஆத்திரத்தையும் உண்டாக்குகிறது. ஆனால் ராமனுக்கு——? உள்ளத்தில் எவ்வித துவேஷமும் உண்டாக வில்லை. அகத்தின் அழகு முகத்திலே தெரி யாதா? அப்பொழுதலர்ந்த செந்தாமரையினை யும் வென்று விட்ட முகப் பொலிவுடன்

''பின்னவன் பெற்ற செல்வம் அடியேனன் பெற்ற"தன்றே''

என்று மனமாரச் சொல்லும் ராமன் சொல் கேட்கிறதல்லவா?

கைகேகியிடம் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்ட ராமன் பெற்ற தாயிடம் வந்து நிகழ்ச்சியைக் கூறும் பண்பினைச் சிறிது நோக் குங்கள்;

......நின் காதல் திருமகன்,
பங்கமில் குணத்து எம்பி பரதனே,
துங்கமாமுடி சூடு கின்றான்.''

நின் ஆசைக்குரிய அருமை மகன்; அப்பனுக் கில்லாத அருங்குணமணி; என் தம்பி; ஆம், பரதன் தான் முடி சூடுகிறான். இப்படி யாரிடம் கூறுகிறான்?

தன் வயிற்றிலே பிறந்து, பட்டத்துக்குரிய வாரி சான ராமன் பட்டம் துறந்து பரதேசியாய் கானகம் செல்ல நேரிட்டதே என்று வருந்திப் புழுங்கிக் கொண்டிருக்கும் கௌசல்யா தேவி யிடம் தான் என்பதை எண்ணும் பொழுது ராமனின் கல்யாண குணம் நம்மையே ஆகர் ஷித்துக் கொண்டு விடுகிறதல்லவா?
இனி பரதனின் குணபாவத்தைக் கொஞ்சம் பார்ப்போம்......

கேகய நாடு சென்றிருந்த பரதன் அயோத் திக்குத் திரும்புகிறான், தாயைக் கண்டான்; தந்தையின் மரணத்தைக் கேட்டான், பெருந் துயர் உற்றான். தந்தையைப் பறி கொடுத்த துயம் எப்படித் தீரும்? பரதனே சொல்லு கிறான் கேளுங்கள்,

''எந்தையும் யாயும், எம்பிரானும், எம்முனும்
அந்த மில் பெருங்குணத்து ராமன் ஆதலால்
வந்தனை அவன் கழல் வைத்த போதலால்
சிந்தை வெம் கொடுந்துயர் தீர்கலாது......

அண்ணன் ராமனே என் தந்தை; ஏன், என் தாயும் அவனே; அது மட்டுமா நான் வழிபடும் கடவுளும் கூட ராமன்தான்! ஆகவே அவன் திருவடிகளில் வணங்குவதொன்றே என் துயரி னைப் போக்கும் என்றுரைக்கும் பரதனுக்குத் தான் ராமனிடம் எவ்வளவு பக்திப் பெருக்கு!

ராமன் கானகம் சென்று விட்டான்; புத்திர சோகமே தயரதன் உயிரை உண்டது என்பதை எல்லாம் அறிந்த பிறகு பரதன் உள்ளம் படும் பாட்டைப் பாருங்கள். அவன் வாயிலிருந்து வெறும் வார்த்தையா வருகிறது. உள்ளக் கொதிப்பல்லவா உதிர்கிறது!... .. கேளுங்கள்!

'மாளவும் உளன்ஒரு மன்னன் வன்சொலால்
மீளவும் உளன்ஒரு வீரன்;—மேயபார்
ஆளவும் உளன் ஒரு பரதன்! ஆமெனில்
கோள் அலது அறநெறி குறையுண்டாகுமோ?

அதனாலேயல்லவா தள்ளரும் பெருநீதித் தனி யாறு புகமண்டும் பள்ளமெனும் தகையானும் பரதனை ராமன் தழுவிக் கொண்ட காட்சியைக் கண்ட கம்பன்,

''தாயா முதல் அறத்தினைத் தழுவிற்று''

என்று வாயாரப் பாடி மகிழ்கிறான், இல்லா விட்டால் ராமன் தான் பரதனை

''சேனுயர் தருமத்தின் தேவு, செம்மையின் ஆணி''

என்றெல்லாம் பாராட்டிப் புகழ்வானா?

இனி சத்ருக்னன் குண சௌந்தர்யம் எப்படிப் பட்டது என்று பார்ப்போம். தயரதன் புதல்வர் களை கம்பன் சதுர் வேதங்கட்கு ஒப்பிட்டுப் பல இடங்களில் பேசுகிறான், ரெம்பப் பொருத்தம், நாலாவது புதல்வன் சத்ருக்னன்; நாலாவது வேதம் அதர்வணம். உலக வழக்கில் அதர் வணம் எவ்வளவு பிரபல்யத்தை அடைத்திருக் கிறதோ அவ்வளவு தான் ராம ராஜ்யத்திலும் சத்ருக்னன் பிரபல்யம் அடைந்திருக்கிறான். என்றாலும் அவனை நாம் நன்றாக இனம் கண்டு கொள்ள முடிகிறது,

நிறத்தாலும் குணத்தாலும் பரதன் ராமனை ஒப்பவன். அப்படியே சத்ருக்னன் லெட்சு மணனை ஒத்து விளங்குகிறான், அநீதியைக் கண்

டால் லெட்சுமணனைப் போலவே அவன் தம்பி யும் கோபமும் ஆத்திரமும் கொண்டு கொதித் தெழுகிறான்.

ஆனாலும் அண்ணன்மாரிடம் எவ்வளவு பிரேமை, மரியாதை, அடக்கம் உடையவனா யிருக்கிறான்? அதையும் எவ்வளவு கச்சிதமாய் வெளிப்படுத்தவும் செய்கிறான் என்பதைப் பாருங்கள்.

பதினான்கு ஆண்டு கழிந்த மறுநாளே வந்து விடுகிறேன்; வந்து ராஜ்யப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்கிறேன் என்று கூறியபடி அண் ணன் ராமன் வந்து சேரவில்லை. எனவே எனது பிரதிக்கைப்படி என்னுயிரைப் போக்கி எனக்கு ஏற்பட்ட பழியினைத் துடைத்துக் கொள்ளப் போகிறேன். ஆனதால் தம்பி! இந்த ராஜ்யப் பொறுப்பை ஏற்றுக்கொள் என்று சத்ருக்னனைப் பார்த்துப் பரதன் சொல்லுகிறான்.

இச்சொல் விஷமாகக் காதில் விழுகிறது; துயரம் கோபம் ஆத்திரம் என்னவெல்லாமோ சத்ருக்னனைக் கவ்விக் கொண்டு விடுகிறது. உடல் நடுங்குகிறது; உள்ளம் கொதிக்கிறது; புத்தி தடுமாறுகிறது உணர்ச்சியற்றுக் கீழேயும் விழுந்து விடுகிறான். எப்படியோ தள்ளாடிக் கொண்டே எழுகிறான்; எழுந்து இல்லாத கோபத்துடன் அண்ணா நான் உனக்கு என்ன துரோகம் செய்தேன்? என்று கேட் கிறான். கேட்டுவிட்டுக் கோபத்தின் வேகம் தணியுமட்டும் சிறிது பேசாமல் நிற்கிறான்! பிறகு தொடர்ந்து பேசுகிறான். கேளுங்கள். அவன் உள்ளக் கிடக்கை மின்னிப் பளிச்சிட்டு நம்மையும் ஆட்கொண்டு விடுகிறது.

''கானாள நிலமகளைக் கைவிட்டுப்
போவானைக் காத்துப் பின்பு
போனாலும் ஒரு தம்பி! —''போனவர்கள்
வரும் அவதி போமிற்று'' என்னா
ஆனாத உயிர்விட நின்று அமைவானும்
ஒரு தம்பி!—அயலே, நானது
யானும் இவ்வரசாள் வென்! என்னா இவ்
அரசாட்சி! இனிதே அம்மா!

கேட்டீர்களா? சரி.

சாதாரணமாக சகோதரர்கள் என்றால் ஒரு குடியில் ஒருவனுக்குப் பிறந்தவர்கள் என்று தானே நாமெல்லாம் எண்ணுவோம்! ஆனால் ராமராஜ்யத்திலே அப்படியா எண்ணுகிறார்கள்?

ராமன் எங்கெங்கோ பிறந்த யார் யாரை எல்லாமோ உடன் பிறப்பாகவல்லவா பாவிக் கிறான்; பழகுகிறான்.

தனது ஒரு மகனைக் காட்டுக்கு அனுப்பிய தனால் தயரதனுக்கு என்ன நட்டம்? அதனால் தனது புத்திரச் செல்வத்தை மேலுமல்லவா பெருக்கிக் கொண்டு விட்டான் என்று சொல்வ தன் மூலம் தனக்கு சகோதரர்களிடம் இருக்கும் வாஞ்சையை இதோ கேளுங்கள் அவன் வாக்கை:—

குகனோடு ஐவர் ஆனேம்
முன்பு; பின் குன்று சூழ்வான்
மகனோடு ஐவர் ஆனோம்
எம்முறை அன்பின் வந்த
அகனமர் காதல் ஐய!
நின்னொடும் எழுவர் ஆனேம்
புகலரும் கானகம் தந்து
புதல்வரால் பொலிந்தான் உந்தை!

விபீஷணனை அரக்கர் குலத்தான் என்று சிறிதும் கருதாது உடன் பிறப்பாய்க் கொள்ளு கிறான் ராமன். அதுவும் எவ்வளவு இதயசுத்தி யோடு என்பதை 'உந்தை' என்ற சொல் மிக நன்றாய் விளக்கி விடுகிறது. அவ்வளவு சிறந்த மனம்; தூய பண்பாடு இப்படிப்பட்ட அற்புத மான சகோதரர்களை நாம் எங்கேயாவது காண முடியுமா என்று வியப்புறுகிறோமல்லவா? முடியும்; நிச்சயமாக முடியும்! எங்கே என்று கேட்கிறீர்கள் வேறு எங்கே? கவிச்சக்கரவர்த்தி யின் அற்புத சிருஷ்டியாகிய ராமராஜ்யத்திலே தான்.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு!

'குறளடிமை'

திருவள்ளுவர் வாழ்வியல் இலக்கண நூல் எழுதினர். கம்பன் அந்த இலக்கண அடிப்படையில் வாழ்வியல் இலக்கியம் எழுதினன். அந்நூலுள் திருவள்ளுவரின் பாவரிகளும், பாச்சொற்களும், பாக் கருத்துக்களும் நேரிடையாகவும் மறைமுகமாகவும் பன்னூறு முறைகள் வந்துள்ளன. அவற்றை முழுமையாய்க் கட்டுரைப் பானைகளிலே வடித்துக் காட்ட வேண்டுமானல் நூற்றுக் கணக்கான பானைகளாய் அமையும். எனவே, 'இராமவதாரம்' எனும் ஒரு சிறு பானையில் சிறு பகுதி வடித்துள்ளேன். இந்தப் பானைச் சோற்றை முழுதையும் அருந்துங்கள். இன்றேல் ஒவ்வொரு சோருய்ச் சுவைத்துப் பாருங்கள். இன்பத் தேன் சொட்டும்!

இராமாவதாரம்

(அ)

கோசலநாடு மழை வளம் மிக்கது; ஆற்று வளம் அளவிடற்பால தன்று; மருத நிலம் மிக மாட்சி பெற்று மிளிர்வது; மாந்தர்தம் பொழுது போக்குகளே அவர்கள் எவ்வளவு வளமோடு மகிழ்வாய் வாழ்ந்தார்கள் என்பதை விளக்கும். உழவர்கள் எல்லாம் உயரிய வாழ்க்கையைப் பெற்றிருந்தனர். நாட்டின் செல்வப் பொழிவு செப்பொணுதது. நால்வகை நிலங்களும் வளம் மலிந்து விளங்கின. மங்கையர் மாண்பு போற்றுதற் குரியதாய் இருந்தது. அறச் சாலைகள் நிரம்பி யிருந்தன. செல்வச் செழிப்பால் நாட்டில் வெளிக் கிளம்பும் புகைகள் எல்லாம் நறுமணம் வீசியிருந்தன, நங்கையரோ அழகும் இயற்கை எழிலும் மிக்கிருந்தனர். கலைகளும் காட்சிப் பொருள்களும் மலிந்திருந்தன. வளப் பெருக்கத்தின் விளைவால் வறுமையே இல்லை, மக்கள் விழாவும் வேள்வியும் கொண்டாடி மகிழ்ந்து இருந்தனர். ஆடவரும் மகளிரும் ஒழுக்கத்தால் உயர்ந்து அறம் நிலைபெறச் செய்தனர்.

பல வளங்கள் கொழித்துச் செழிக்கும் கோசல நாட்டு மன்னன் வாழ்ந்த தலைநகரமான அயோத்தி பல வகையாலும் வியக்கும் தன்மையதாய் அழகுடன் பொழிந்தது. மதிலும் அகழியும் வாயில்களும் எழுநிலை மாட மாளிகைகளும் கொடிகளும் ஓங்கி நின்றன. நகரில் எங்கும் ஆடல், பாடல் விளையாட்டுக்களில் மூழ்கி இருந்தனர். நகர மகளிரின் மேனி அழகு மிக மிளிர்ந்தது. மாந்தரெலாம் மிகுந்த மகிழ்ச்சியில் திளைத் திருந்தனர். அவர்களின் பொழுது போக்கோ உண்மையில் இன்பந் தர வல்லவையாய் இருந்தன. நல்லறப் பணிகள் நிரம்பியிருந்தன. பொதுவில் அயோத்தி மாநகர் கல்வியும், செல்வமும் சிறந்ததாய் விளங்கியது.

கோசல நாட்டுச் சக்கரவர்த்தி தயரதன் தனிப் பெருமை தழைத்தோங்கி நின்ருன். உலகம் முழுதுடையவனுய் ஆட்சி செய்திருந்தான். அவனுடைய குடைச் சிறப்பு மிளிர்ந்திருந்தது.

வளங்களும் சிறப்புக்களும் மலிந்திருந்தும் தயரத சக்கரவர்த்திக்கு மனக் கலக்கம் தோன்றியது. அதனைத் தம் குலகுரு வசிட்டரிடம் கூறுகின்ருன்.

''அறுபதினுயிரம் ஆண்டும் மாண்டு உற,
உறுபகை ஒடுக்கி, இவ் வுலகை ஓம்பினேன்
பிறிது ஒரு குறை இலை; என் பின் வையகம்
மறுகுவது என்பது ஓர் மறுக்கம் உண்டு
அரோ'' (32/3)

இந்த ஏக்கக் குரல் நம்பால்,

''மங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன்
நன்கலம் நன்மக்கட் பேறு'' (6/10)

என்ற குரலை நினைவுறுத்தி நிற்கின்றது.

தயரதன் பின்னும்,

''அருந்தவ முனிவரும், அந்தணாளரும்
வருந்துதல் இன்றியே வாழ்வின் வைகினர்;
இருந்துயர் உழக்குநர் என்பின் என்பது ஓர்
அருந்துயர் வருத்தும், என் அகத்தை
என்றனன் (32/4)

அரிய தவசிகளும், முனிவர்களும், அந்தண ரும் வருத்தம் இன்றி வாழ்ந்தனர் என்னில் அஃது மன்னனின் செயல்பாட்டு அறிவின் ஆற்றலைக் காட்டும். எனவே, அந்த அறிவாற் றலுடன் நிலைமைகளைக் கொண்டு செலுத்தும் பிள்ளைப் பேறு இல்லையே யென ஏங்குகின்றான்.

''பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவு
அறிந்த
மக்கட் பேறு அல்ல பிற'' (7/1)

என்னும் திருகுறட் பாவினை நாம் நினைந்து அவனுக்காக அனுதாபப்படுகின்றோம்.

(ஆ)

பிள்ளைப்பேறு உண்டாக வில்லையே என்று வருந்திய தயரதனிடம் வசிட்டர், கலைக்கோட்டு முனிவரைக் கொண்டு வேள்வி செய்ய வேண் டும் என்கின்றார். தயரதன் அம் முனிவரை எவ்வாறு அழைத்து வருவது என்று கேட்கின் றான். அப்போழ்து வசிட்டர் அம் முனிவர் உரோமபதன் என்னும் மன்னவனின் நாட்டில் இருப்பதாகக் கூறும் முன்னே அவர் அந் நாட் டிற்கு வந்த வரலாற்றைக் கூறுகின்றார்.

உரோமபதன் நாட்டில் மழையே இன்றி கொடிய வறட்சி ஏற்பட்டது. கலைக்கோட்டு முனிவர் அந்நாட்டு எல்கைக்குள் வந்தால் நன் மழை பொழியும் என்றார்கள். அவரை எப்படி அழைத்து வருவது என்று மன்னன் சிந்தித் தான். அப்போழ்து சில மாதர் எழுந்து தாங்கள் அப் பணியை மேற்கொள்வதாகக் கூறினர்.

அம் மாதரைக் கம்பர் எப்படி அடையாளம் காட்டுகின்றார்?

''சோதிநுதல், கருநெடுங்கன், துவர்
இதழ்வாய்,
தரளநகை, துணைமென் கொங்கை'' (37/37)

''பனிப் பிறையைப்
பழித்தநுதல், பணைத்த வேய்த்தோள்,
ஏங்கும் இடை, தடித்த முலை, இருண்டகுழல்
மருண்ட விழி, இலவச் செவ்வாய்ப்
பூங்கொடியீர்'' (37/38

என்றெல்லாம் அவர்தம் உறுப்புகளைக் காட்டி உருவத்தை உய்த்துணர வைக்கின்றார்!

''ஒன்றுதல் (109/8), கொடும் புருவம் (109/6), படாஅமுலை (109/7), உண்கண் (110/1), பசையினள் பையநகும் (110/8), வேய்த்தோள் (112/3), முத்தம் முறுவல் (112/3), வேல் உண் கண் (112/3). நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும் மென்னீரன் யாம்வீழ் பவள் (112/1), பிணை ஏர் மட நோக்கு (109/9), தோட்டார் கதுப் பினள் (111/5) - வாள் எயிறு ஊறிய நீர் (113/1)''

என்றெல்லாம் திருவள்ளுவர் கூறும் வர்ணனைச் சொற்களைக் கம்பன் காட்டிக் கொடுக்கும் அங்கங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தல் இன்பப் போதையளிக்கும்!

(இ)

உரோமபதன் நாட்டில் மழை சுரக்கக் கலைக் கோட்டு முனிவர் தன் எல்கைக்குள் காலடி வைக்கச் செய்வது எப்படி எனச் சிந்திக்கின் றான். இரு மாதர், தாம் சென்று அழைத்து வருவதாகச் செல்கின்றனர். தவ சிரேஷ்டர் களின் வேடம் தாங்கிக் கலைக்கோட்டு முனி வரின் தந்தையார் இல்லாத சமயம் பார்த்து அவரது பர்ணசாலைக்குச் செல்கின்றனர். கலைக் கோட்டு முனிவர் ஐயுரு வண்ணம் நடந்து கொண்டு அவருடைய அன்பிற்குப் பாத்திரராகி விடுகின்றனர். அவருக்கு என்று தாங்கள் எடுத்துச் சென்ற முக்கனிகள், தெங்கு முதலி யன தந்து அவரை அருந்த வைத்தனர்.

பெண்மையின் மென்மை அவர்கள் கைவழி நெகிழ்ந்து தவ நிலை ஆடவரையும் கிரங்க வைக்கும் போலும். மெல்லியளார் சின்னாட்கள் இங்ஙனம் அணுகி இருந்து ஒருநாள் அம் முனி வரைத் தங்கள் பர்ணசாலைக்கு வரும்படி வேண்டி அழைத்தனர். ஒரு யோசனை தூரத்தில் இருந்த அவர்களது பன்னசாலைக்கு அவர்களு டன் புறப்பட்டார்.

பெண்டிர் பேருவகை பூத்தனர்; அழைத்ததும் புறப்பட்டு விட்டாரே என வியக்கும் நெஞ்சோடு வழிகாட்டி அழைத்துச் சென்றனர். அப்போழ்து அவர்களை,

''தம் மனம் என மருள் தையலார்களே'' (38/44) எனக் கம்பன் குறிப்பிடுகின்றான்.

கண்டவர் கருத்தை ஈர்க்க வல்ல அவர்களு டைய கண்கள் மருளுகின்றனவாம்! அதுவும் அவர்களுடைய மனம் மருளுவதைப் போலவே மருள்கின்றனவாம்!

பொய்த் தவ வேடம் பூண்டு இத்துணை நாட் கள் அவரை ஏமாற்றியதை அவர் அறிந்து கொண்டால் எப்படிச் சபிப்பாரோ என அவர் கள் நெஞ்சம் மருண்டது; சரி! கண்கள் ஏன் மருண்டன?

அக் கண்கள் 'பிணைஏர் மட நோக்கு' கொண் டன! அதனால் மருண்டன என்கிறார் திருவள்ளுவர்.

அப்படியானால் திருவள்ளுவர் காட்டும் அப் பெண்டிர் நெஞ்சத்தால் மருளுவில்லையோ? அவர்கள் தம் நெஞ்சத்தால் மருண்டனர்! தம் பருவ எழில் பிறர் கண்பட்டு சிதைவுறக் கூடுமோ எனத் தம்மையும் அறியாமலேயே அவர்கள் மருண்டனர்! அத்தகைய மருட்சிக்குத் தானே 'நாணம்' என்று பெயர்! ஆகவே,

''பிணைஏர் மட நோக்கும் நாணும் உடைய'' (109/9) திருவள்ளுவரின் படைப்புப் பெண்டி ரைக் கலைக்கோட்டு முனிவரை வசீகரித்து வரும் மாதர் தம் உருவில் காண்கின்றோ மன்றோ!

(ஈ)

உரோமபத மன்னன் தாமாகவே முன் வந்த மாதர் தம்மைக் கலைக்கோட்டு முனிவரை அழைத்துவர அனுப்பி விட்டு ஆவலுடன் காத்திருந்தான்.

எண்ணிய வண்ணம் ஏந்திழையர் ஏற்றம்மிகு அம் முனிவரைத் தவத்தவர் வேடம் தாங்கி ஏமாற்றித் தம் நாட்டு எல்லைக்குள் அழைத்து வந்து விட்டனர்! அக்கணமே, குளங் களும் ஆறுகளும் வழிந்தோடும் வகைத்தாய வான்மழை கொட்டியது! அவ்வாறு நதிகளும் குளங்களும் நிரம்பவும், கரும்பு செந்நெல் அழகுற ஓங்கிடவும் ஏற்றாற்போல் வானம் இடைவிடாது மழை பெய்ததைக் கண்டு மன்னன் உற்றதை உணர்ந்தான்!

சிவந்த வாயும், தாமரை மலர் போன்ற முகமும், முத்துப்பல் சிரிப்பும், புகை போன்ற மென்மைக் கூந்தலும் உடைய தம் மாதர் செய்த சூழ்ச்சியால், கலைக்கோட்டு முனிவர் தன் நாட்டு எல்லையுள் புக்கனர் போலும் என நினைந்தான்!

அம் முனிவரைக் குறிப்பிடும் மன்னன்,

''காமமும் வெகுளியும் களிப்பும், கைத்தஅக கோமுனி'' (39/47) என்கின்றான்.

துறவியர் மெய்யுணர்தல் வேண்டுமாதலால்,

''காமம், வெகுளி, மயக்கம் இவை மூன்றன்
நாமம் கெடக் கெடும் நோய்'' (36/10)
என்னும் நிலையினராய் இருத்தல் வேண்டும் என்கிறார் திருவள்ளுவரும்!

கம்பனின் சொல்லான 'களிப்பும்' திருவள்ளு வரின் சொல்லான 'மயக்கமும்' ஒருதன்மைத் தன! களிப்பின் மிகுதியே மயக்கம் அன்றோ!

ஆக, திருவள்ளுவர் சிறந்த முனிவனுக்குக் கூறியுள்ள இலக்கணத்தை — இலக்கணச் சொற்களை — அப்படியே கம்பன் கையாண்டு இருப்பதைக் காண்கிறோம்!

(உ)

கலைக்கோட்டு முனிவர் உரோமபதன் நாட்டிற்கு வந்து விட்டார். மன்னன் அவருக்கேற்ற மரியாதைகளுடன் இருக்கை ஈந்து அமர்த்தினன்,

அப்போழ்து இருந்த சூழ்நிலையைக் கவிச் சக்கரவர்த்தி சாற்ற நினைந்து,
''வறுமை நோய் தணிதர வான் வழங்கவே
உறுதுயர் தவிர்ந்தது, அவ் உலகம்''
(40/55) என்கின்றன்.

வான் வழங்காது விட்டபோழ்து. வறுமை நோய் பற்றியது; வறுமை பற்றினல் மக்கள் பசியால் வாடிவதங்குவர்; பசியினும் உறுதுயர் வேறு என்ன இருக்க ஒறும்? இதனைத்தான் திருவள்ளுவரும்,

''விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியன் உலகத்து
உள்நின்று உடற்றும் பசி'' (2/3)

என கூறியுள்ளார்.

கம்பன் காட்டும் பரத்துவம்!

அருட்பா S. R. தங்கவேலு

இராமகாதை எத்துணை பொருட் செறிவு, சொற்செறிவு ஆகியவற்றோடு நவரசங்க ளோடும் இயற்றப்பெற்றிருப்பினும் எல்லாவற் றினூடும் ஊடுருவிச் செல்லும் இராம தத்துவம் நம்மை ஓர் இனங்காண முடியாத இன்ப நிலை யில் ஆழ்த்துகின்றது. கம்பன் இதைக் கையாண்டிருக்கும் சமத்காரமும், லாவகமும் நம்மை ஓர் பெருவியப்பில் ஆழ்த்துகின்றது!

எடுத்த எடுப்பிலேயே இராமன் தான் முழு முதற்பொருள், ஒப்பும் நிகர்வும் இல்லாத தனிப் பெரும் பொருள் என்பதைக் கோடிட்டுக் காட்டி விட்டான் தனது பாயிரத்தால்

''உலகம் யாவையும் தாம்உள ஆக்கலும்
நிலைபெறுத்தலும், நீக்கலும் நீங்கலா
அலகு இலா விளையாட்டுடையார் அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண்
நாங்களே''
(பால காண்டம் பாயிரம்)

இந்தப் பேரண்டத்தை உண்டுமிழ்ந்த மூலப் பரம் பொருள் என்ற தனது சித்தாந்தத்திற்கு அழகும் பலமும் கூட்டுகின்றான் பல முக்கியமான பாத்திரங்கள் மூலமாக கதைப் போக் கிலே; வெறும் கோட்பாடு கொள்கை என்று பேசி அலுப்புத் தட்டாமல் இருக்கும் வண்ணம் பல நெஞ்சை அள்ளும் அற்புதமான நிகழ்ச்சி களில் வரும் கதாநாயகர்கள், கதாநாயகிகள் மூலமாக இக் கோட்பாட்டை நமக்குக் காட்டு கின்றான் கம்பன்.

கம்பன் இராமனை என்னவாக நினைத்திருந் தான்! ஆதிநாயகனாக, மூலமுதல்வனாக, சத்தியப் பொருளாக, நித்தியப் பொருளாக, ஆதிமூலமாக பரப்பிரம்மமாக, தேவதேவனாக, இன்னும் சொல் லால் பேசப்படாத பொருளாகவெல்லாம் நினைத்திருந்தான். இதைக் காட்டவல்ல சக்தி கம்பனுக்குத் தானிருந்தது. ஆழ்வார்கள் அருளிய குறிப்பாக நம்மாழ்வாரது திருவாய் மொழியிலே ஆழங்காற்பட்டவர் இதை நாம் ஓரளவு நுணுகி ஆராய்ந்தால் கண்டு கொள்ளலாம்.

கம்பனது இராம காதை வள்ளுவரது வாக்கும் பெற்றுள்ளது என்று சொன்னால் கொஞ்சம் வியப்பாகத் தானிருக்கும்! ஆழ்வார் கள் குறிப்பாக நம்மாழ்வார் கம்பனை முழுதும் தன் மயமாக்கிக் கொண்டார் என்றால் இன்னும் கொஞ்சம் அதிகம் ஆச்சரியமாகத்தானிருக்கும். ஆனால் இவைகள் முற்றும் உண்மை என்று ஆழ்ந்து நோக்குவோர் காணலாம்.

இப்பொழுது வள்ளுவருக்கு வருவோம். இவரது சமயம் மதம் வழிபடு மூர்த்தி என்று துல்லியமாக நமக்கு ஒன்றுந் தெரியாது. இவ ரது நூல் ஒரு தர்மசாஸ்திரம். நீதி ஏடு, அறக் கொத்து, உலக மானிட ஜாதிக்கே பொருத்த மானது, காலத்தையும் இடத்தையும் வென் றது, என்றெல்லாம் நமக்குத் தெரியும். ஆனால் ஆராய்ச்சிக் கண் கொண்டு நோக்குவோர் இவர் ஒரு வைணவரென்றும் ஏன் வீர வைண வர் என்று கூடச் சொல்லி விடலாம்!

வள்ளுவப் பெருமான் தமது தமிழ்வேதத் திலே இந்த உலக மக்கள் எல்லோருக்கும் எக் காலத்தும், எந்தச் சூழலிலும் உகந்த பொருத் தமான அறநெறிகளைச் சொல்லவேண்டுமென்று தான் எண்ணினார் தனது ஜாதி சமய இன வேற்றுமைகளைக் காட்டாது! ஆனால் அவரது மனத்திலே ஆழமாகவே வேரூன்றியிருக்கும் சமய உணர்வை, தனது வழிபடு மூர்த்தியை, மறைக்கவே யியலவில்லை. தேவரது 1330குறள் வெண்பாக்களிடம் எங்கேனும் ஓரிடத்தில் சிவன், முருகன், கஜமுகன் என்று வருகின்றதா

ஏன்! வள்ளுவர் காலத்திலே சைவம் கௌமாரம், காணபத்தியம் போன்ற அகச்சமயங்கள் இல்லையா?

வள்ளுவர் ''ஆதிபகவன்'' ''செய்யாள்'' ''திரு'' ''அடியளந்தான்' 'தாமரையினள்'' '' தாமரைக் கண்ணன் '' '' நிலமென்னும் நல்லாள்'' என்பன போன்று; அடி போன்று ''அவ்வுலகும் மேலுலகும்'' ''புத்தேளுலகு'' ''புத்தெளிர் வாழும் உலகு'' என்பன போன்றும் பேசுவார். ஆனல் கைலாயம் என்ரே, பிரம்மலோகம் என்ரே இல்லையே! ஏன்?

வள்ளுவர் தனது நூலிலே வைணவச் சார்பான மூர்த்திகளைப் பற்றித்தான் பேசுகின்ருர்; மாமுகடி என் று மூத்தவளாகிய மூதேவிப் பற்றிக்கூடப்பேசும் இவர் மற்ற சமய மூர்த்திகளைப் பற்றி நேர்முகமாகவோ மறைமுகமாகவோ பேசாதது பெரு வியப்பாகவேயிருக்கிறது.

முதற்குறள் வெண்பாவிலே வரும் ஆதி பகவன் வைணவ சமயத்தில் ஒரு சாரராகிய ''முக்கோற் பகவர்கள்' என்பவர்களையே குறிக்கும். இதோ இ ந் த இரண்டு குறள்கள் ஐயம் சிறிதும் அற செந்நாப்போதார் வைணவர் என்பதைக் காட்டுகின்றன.

''மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தா அய ரெல்லாம் ஒருங்கு ''

(மடி இன்மை 610)

'' தாம்வீழ்வார் மென்ரேள் து யி லி ன்
இனிதுகொல்
தாமரைக் கண்ணன் உலகு''

(புணர்ச்சி மகிழ்தல் 1103)

நிற்க, வைணவத்தின் மூலக் கோட்பாடாகிய கொல்லாமையை நாயனர் வலியுறுத்துகின்ருர்.

''ஒன்ருக நல்லது கொல்லாமை மற்று அதன்
பின்சாரப் பொய்யாமை நன்று ''

(கொல்லாமை 323)

நாயனரது உள்ளத்தை ந ன் கு புரிந்து கொண்டு இப்போது மறைக்கு உரையெழுதியுள்ள ஆசிரியர்களில் பரிமேலழகர் மிகச்சிறந்த உரையாசிரியரென்பதும் அவர் ஒரு வைணவர் என்பதும் பிரசித்தம்.

ஆக நாயனர் தான் பொதுமையாக இருக்க எவ்வளவோ முயற்சிகள் செய்தார். ஆ ன ல் இவரே சொல்வது போல் தும்மல்போல் தானே வெளிப்பட்டு விடுகின்றது!

நம்மாழ்வார் நிலையும் இதே தான்! தான் சமய சமரஸவாதியென்று காட்டிக் கொள்ள முயன்ருர், முயன்ருர். எவ்வளவோ முயன்ருர்! இறுதியில் துணிந்து அடக்க முடியாத நிலையில் அந்தப் பரமபதநாதனே, திருமகள் கேள்வனே பரமபுருசன் பரலோக தேவன் பரத்துவத்திற்கு உரியவன் என்று எக்காளம் முழக்குகின்ருர்!

'' உயர்வற உயர்நலம் உடையவன் எவன் அவன்'' என்று தனக்கு மேல் உயர்வு இல்லாத ஒன்றைக் காட்டுகின்ருர். ''யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடையான் '' என்று மணிமொழி பெருமான்தான் பரத்துவத்திற்கு உரியவனுகக் கருதும் சிவபரத்தை போற்றிப் புகழ்கின்ருர். '' சிவனென்னும் ந ா ம ம் தனக்கே உடைய செம்மேனி எம்மான் '' என அப்பர் சுவாமிகள் முக்கண்ணனைப் பாடுவார். இவ்வாருக தங்களது ஆன்ம நாயகர்களுக்குப் பரித்துவம் பாடுவார்கள் அருளாளர்கள்.

இப்பொழுது நம்மாழ்வார் எவ்வளவு அற்புதமான சமரஸப் பாசுரம் ஒன்றைப் பாடுகின்ருர் பாருங்கள்.

'ஒளி மணி வண்ணன் என்கோ!
ஒருவன் என்று ஏத்த நின்ற
நளிமதிச் சடையன் எங்கோ.
நான்முகக் கடவுள் எங்கோ!
அளிமகிழ்ந்து உலகம் எல்லாம்
படைத்து அவை ஏத்த நின்ற
களிமலர்த் துளவன் எம்மான்
கண்ணனையே மாயனையே

(திருவாய் மொழி மூன்ரும் பத்து)

இது ஒரு சமரஸ சங்கநாதம்; ஆனால் இதில் ஆழ்வாருக்கு மனோ நிறைவு பூர்ணத்துவம் ஏற்படவில்லை. தன்னை மீறிப் பொங்கிப் பூரித்து எழும் அந்தராத்மாவின் எண்ணத்தை இதோ இப்படிக் கொட்டி விட்டார்!

''ஒன்று எனப் பலஎன அறிவு
அரும் வடிவினுள் நின்ற
நன்று எழில் நாரணன் நான்முகன்.
அரன் என்னும் இவரை
ஒன்று நும் மனத்து வைத்து
உன்னி நும் இருபசை அறுத்து
நன்று என நலம் செய்வது
அவனிடை நம்முடை நாளே''
(திருவாய் மொழி மூன்றும் பத்து)

இங்கே ''இருபசை அறுத்து'' என்று அழுத்தமாக நான்முகனையும் அரனையும் விட்டு நாராயணனைக் கெட்டியாக இறுக்கமாகப் பற்றச் சொல்லுகின்றார். இதுதான் நம்மாழ்வரது நிஜ சொரூபம்!

ஜைனத் துறவியாகிய இளங்கோவடிகள் இராமபிரானது அனந்த கல்யாண குணங்களிலும் திவ்யமங்கள வடிவழகிலும் ஈடுபட்டு ''சோ அரணும் போர் மடியத் தொல் இலங்கை கட்டழித்த சேவகன் சீர் கேளாத செவி என்ன செவியே! திருமால் சீர் கேளாத செவி என்ன செவியே!'' என இந்த இராமனே திருமால் எனச் சுட்டி ஆனந்தப் பரவசத்தில் மூழ்குகிறார்.

இவ்வாறாக இராமபிரானது குணவழகு வடிவழகு என இத்தியாதி அழகுகளிலே உள்ளத்தைப் பறிகொடுத்தவர்களின் எண்ண அலைகள் கம்பனைத் தழுவியிருக்கின்றன; அவரது படைப்பிற்குப் பின்னணியாகவும் வந்து சக்தியாகவும் அமைந்திருக்கின்றன. இராமபரத்துவமே அவரது படைப்பின் ஜீவ மூச்சாக உயிரோட்டமாக அமைந்திருக்கின்றது!

இப்பொழுது கம்பனது பரத்துவ மாளிகை எவ்வாறு செங்கல் செங்கல்லாக அடுக்கடுக்காக மேலெழுகின்றது என்பதைக் காண்போம். பல மூல பாத்திரங்கள் வாய்ச் சொல்லாக இதை அமைக்கின்றார். ''அலகு இலா விளையாட்டுடையார் அவர் தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே'' என்று பரத்துவ மாளிகை முகப்பை அமைத்தவர் பையப் பைய இதை ஒரு மகோன்னதமான, மாளிகையாகச் சமைத்து இந்த உலகையே பெரு வியப்பில் ஆழ்த்தி விட்டார்.

இந்தப் பரம்பொருள் தன்மையை அரக்கர்கள் வானரங்கள் முதலிய அஃறிணை பொருட்கள் வாயிலாக மட்டுமின்றி மயர்வற மதி நலம் பெற்ற வீடணன், கும்பகர்ணன் போன்ற ராக்கிதர்கள் வாய்ச் சொல்லாகவும் ஏன் சிவ பெருமான் மூலமாகவே சொல்லுகிறார் அதி அற்புதமாக! குகன் அன்பின் மொத்த உருவாதலால் அவன் நிலை ஒரு அலாதியானது அக்யம் என்று சொல்லும் அந்த நட்பு பாவத்தையும் கடந்து 'வாத்ஸல்யம்' எனப் பெறும் 'தாய் சேய்' நிலையை அடைந்து விடுகின்றான். இராமன் சௌலப்யம்—எளிமை—சௌவில்யம்-இனிமை—ஆகிய குணங்களின் இருப்பிடமாதலால் குகனுக்கும் இராமனுக்கும் இடையே நிலவிய பாசவுணர்வு, வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டது! அவன் வேடன் நீசன் மிலேச்சன் ஆதலால் அவன் ஒரு பட்டை தீட்டப்படாத வைரக் குன்றம். ''உங்கள் குலத்தனி ராதற்கு உயிர்த் துணைவன் உயர் தோளான்'' என்று சுமித்திரன் மூலமாக பரதனுக்கு குகனைப் பற்றிச் சொல்லுவதாக அமைத்து 'உயிர்த் துணைவன்' என்ற சொல்லால் இராமனுக்கும் குகனுக்கும் இடையே நிலவிய அன்பினை அப்படியே படம் பிடித்துக் காட்டி விட்டார் கவிச்சக்கரவர்த்தி. பல நூற்றாண்டுகளுக்குப் பின்னால் வந்த வள்ளலார் இந்தக் குகன் நட்பை ''அன்பெனும் வலைக்குட்படு பரம்பொருளே'' என்று அழகாகச் சொல்லிவிட்டார். இராம பரத்துவத்தைக் கம்பன் மூலமாகக் காட்ட வந்த எளியேனுக்கு பளிச்சென இத் தொடர் மின்வெட்டியது.

விராதன் இராமனைப் பராபரவஸ்து என்று புகழ் பாடும் நிலை மிக அற்புதம்,

''பனி நின்ற பெரும் பிறவிக் கடல் கடக்கும்
படிபற்றி
நனி நின்ற சமயத்தோர் எல்லாரும்
நன்றென்னத்
தனி நின்ற தத்துவத்தின் தகை மூர்த்தி
நீயாகில்

இனி நின்ற முதல் தேவர் என் கொண்டென்
செய்வாரே?''

(ஆரணிய காண்டம்
விராதன் வதைப் படலம்)

''இனி நின்ற முதல் தேவர் என் கொண் டென்
செய்வாரே''

என்ற வரி பரத்துவத்தின் அற்புதமான முத்திரை!

சரபங்கரின் ''இரு நிலத்தவோ நின் இணையடித் தாமரைதாம்'' ''கருங் கடலில் கண் வளர்ந்தோய்! கைம் மாறும் உண்டோ? என்ற கருத்துக்கள் பரித்துவ மாளிகைக்கு அழகு கூட்டுகின்றன.

ஈசன் முதல் மற்றும் இமையோர் உலகும் மற்றைத் தேசமுதல் முற்றும் ஓர் இமைப்பின் உயிர்தின்ப'' என்று மாரீசன் இராவணனுக்கு இராமனது அம்பின் திறத்தைப் பற்றிக் கூறும் அறிவுரை பரத்துவ மாளிகையில் ஒரு கேந்திர ஸ்தானத்தில் இருக்கின்றது.

கவந்தன் இராமபிரானைத் துதிக்கும் அழகு ஆழ்வார் பாசுரம் போன்றே அமைந்து விடுகின்றது கம்பன் கவி வண்ணத்தால்!

''காண்பார்க்கும் காணப் பல பொருட்கும்
கண்ணாகிப்
புண்பாய் போல் நிற்றயால்! யாதொன்றும்
பூணாதாய்!
மாண்பால் உலகை வயிற்றெளித்து
வாங்குதியால்
ஆண்பாலோ? பெண்பாலோ? அப்பாலோ?
அப்பாலோ?

இந்த அற்புதத் திருப்பாட்டு முவுலகுண்டு மிழ்ந்த முதல்வா'' ''ஆணல்லன் பெண்ணல்லன் அல்லா அலியுமல்லன்'' என்ற ஆழ்வாரின் பாசுரங்களின் வரிகளை நினைவுக்குக் கொண்டு வருகின்றது.

கவிக் கூற்றாக கம்பன் இராமனை மூல முதற் பொருளென்று சொல்லும் இடங்கள் பலவுண்டு. அவற்றுள் ''இம்மையே எழுமை நோய்க்கும் மருந்தினை இராமன் என்னும் செம்மை சேர் நாமம் தன்னைக் கண்களில் தெரியக் கண்டான்'' என்று இராமபாணம் வாலியைத் துளைக்கும் பொழுது வாலி இராமன் என்ற பெயரை அம்பில் கண்டான் என்ற சந்தர்ப்பத்தில் கம்பன் வாக்கு இவ்வாறு அமைகின்றது. இது ஒரு அற்புதமான இடம். கம்பன் இராமனைப் பற்றி என்ன எழுதியிருந்தார் என்பதைக் கோடிட்டுக் காட்டும் வாக்கு.

வாலி தமது மரணத் தருவாயில் மரண வாக்கு மூலமாக (மரணவாக்கு மூலம் உலகெங்கனும் எல்லா நீதி மன்றங்களிலும் உண்மையென்று எடுத்துக் கொள்ளப்படுகின்றது) என்னமாக உள்ளத்தை ஈர்க்கும் பாங்கிலே தனது மகன் அங்கதனுக்கு இராமனை சரண் புகுந்து உய்யுமாறு அறிவுரை சொல்லுகின்றான். இராமன் சாட்சாத் பரம்பொருள் என்பதை மிக மிக அற்புதமாக கம்பன், வாலியின் மூலமாக நமக்குக் காட்டுகின்றார். இது ஒரு ஆனந்த அற்புதத் திருப்பாட்டு.

''பாலமை தவிர் நீ. என் சொல் பற்றுதி ஆயின்
தன்னின்
மேல் ஒரு பொருளும் இல்லா மெய்ப் பொருள்
வில்லுந் தாங்கிக்
கால் தரை தோய நின்று கட்புலக்(கு)உற்ற(து)
அம்மா
மால்தரும் பிறவி நோய்க்கு மருந்தென
வணங்கு மைந்தா

(கிட்கிந்தா காண்டம் வாலி வதைப் படலம்)

''மேல் ஒரு பொருளும் இல்லா மெய்ப் பொருள் வில்லுந் தாங்கி'' என்ற தொடர் பரத்துவத்தின் ஆழமான முத்திரை!

சுக்ரீவன் வாய்ச் சொல்லாக கம்பன் இராம பரத்துவத்தைச் சொல்லாதது ஏன்? ஆம்! அவன் பெருங் குடியன் என்று பின்னால் சொல்லப் போகின்றார். எனவே பொருத்த மின்மையை உன்னி அவனைத் தாண்டிச் செல்லுகின்றார் மேலே.

சொல்லின் செல்வன், வாயு மைந்தன், அஞ்சனை குமாரன், அனுமன் வாயிலாக அவன் இராவணனுக்கு இராகவனைப் பற்றிச்சொல்லும் முகத்தான் கம்ப நாட்டாழ்வார் எவ்வளவுஅற்புதமான வாய் நிறைந்த பாட்டாக, பாடிய வாய் தேனூறும் பாட்டாக ஒன்றைச் சொல்லுகின்றார்

''மூலமும் நடுவும் ஈறும்
இல்லது ஓர் மும்மைத்து ஆய

காலமும் கணக்கும் நீத்த
காரணன் கைவிரல் ஏந்திச்
சூலமும் திகிரி சங்கும்
கிரிடமும் துறந்து தொல்லை
ஆலமும் மலரும் வெள்ளிப்
பொருப்பும் விட்டு அயோத்தி வந்தான்''
(சுந்தரகாண்டம்
பிணி வீட்டு படலம்)

காலமும் கணக்கும் நீத்த காரணன் (Beyond causation, Immeusarable original causless cause) என்ற வரி எவ்வளவு அழுத்தமும் ஆழமும் கொண்டது?

இங்கு வில்லிப்புத்தூரார் காட்டும் நாராயண பரத்துவம் — இராமபரத்துவந்தான், நமக்கு நினைவிற்கு வருகின்றது.

''மேவரும் ஞானனந்த வெள்ளமாய்
விதித்தோன் ஆகி
மூவரும் ஆகி அந்த மூவர்க்கும் முதல்வனுகி
யாவரும் யாவுமாகி இறைஞ்சுவார் இறைஞ்சப்
பற்பல
தேவருமாகி நின்ற செங்கண்மால் எங்கள்
கோவே'

.'மூவரும் ஆகி அந்த மூவர்க்கும் முதல்வனுகி'' என்பதுதான் வில்லிப்புத்தூராரது திருவுள்ளமும் தேர்ந்த முடிவும்!!

மணிமொழிப் பெருமான் வேறு விதமாக இதே கருத்தைச் சொல்லுவார் இப்படி— ''கரணங்கள் எல்லாம் கடந்து நின்ற கறை மிடற்றன்'' ''முன்னைப் பரம் பொருட்கும் முன்னைப் பரம் பொருளே பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியனே'' காலத்தாலும் இடத்தாலும் வேறுபட்ட பெரியார்கள் எத்துணை ஆனந்தமாக ஒரே பார்வையில் நிற்கின்ருர்கள்?

விடணன் வாய்ச் சொல்லாக கம்பர் பெருமான் இராமபரத்துவத்தை ''பெருந்தவம் இயற்றி ஞேர்க்கும் பேர் அரும் பிறவி நோய்க்கு மருந்து என நின்ருன் தானே'' எனச் சுருக்கமாக அழகு ததும்பச் சொல்லுவார்.

கும்பகர்ணனின் சொல்லாக ''ஏற்றிய வில்லோன் யார்க்கும் இறையவன். இராமன் நின்ருன்'' என்றும் ''வேதநாயகனே உன்னைக் கருணையால் வேண்டி விட்டான்'' என்றும் அமைத்து இராமபரத்துவத்திற்கு மேலும் சௌந்தர்யம் கூட்டுகின்ருர் கம்பர் பெருமான்'

இராம கதைக்கு இராமன் கதாநாயகனு? இராவணன் கதாநாயகனு? என்று ஐயுறும் வண்ணம் அத்துணை ஏற்றம் பெற்ற தசமுகன் தனக்கே உரிய பாணியில் இராம பரத்துவம் பாடிவிட்டான் படுகளத்திலே!

'சிவனே அல்லன்; நான்முகன் அல்லன்.
திருமாலாம்
அவனே அல்லன்; மெய்வரும் எல்லாம்
ஆகின்ருன்
தவனே என்னின் செய்துமுடிக்கும் தான்,
அல்லன்
இவனே தான் அவ்வேத முதற் காரணன்?'
என்ருன்;

சிவபெருமானே இராமபரத்துவம் பாட வைத்து விட்டான் கம்ப நாடன்! சீதை தீக்குளித்த அக்னியினின்றும் சிவபெருமான் தோன்றி இராமன் முழுமுதற் கடவுள் என்று முத்தாய்ப்பு வைத்து விட்டார்.

தியாகப் பிரம்மம் சுந்தரத் தெலுங்கினிலே ''சீதம்ம மாயம்ம ஸ்ரீராமுடு மாதன்றி''— சீதை எனது தாய், ஸ்ரீராமன் எனது தந்தை — ''ஓ ராமா நின்னி நாமமு, ஏ மிருதி எந்த ருசி'' — ஓ. ராம நினது நாமம் என்ன மதுரம். எவ்வளவு இனிப்பு என்ற இதய தாகத்தை எங்ஙனம் வர்ணிப்பது? !

''என்னும் மாத்திரத்து ஏறுஅமர்
கடவுளும் இசைந்தான்
உன்னை நீ என்னும் உணர்ந்திலை
போலுமால் உரவோய்!
முன்னை ஆதியாம் மூர்த்தி நீ!
மூவகை உலகின்
அன்னை சீதையாம் மாதுநின்
மார்பின் வந்து அமைந்தாள்!

இங்கு ரச வார்த்தை! ஒருவன் மனைவியை ஒருவன் அபகரித்துச் செல்லல், கற்பை நிலை நாட்ட தீக்குளித்தல் முதலியன பெரும்பாலும் மேற்கத்திய கலாச்சார மரபுகள்; பெரும் காப்பியங்களாகிய இல்லியத், ஒதஸி, 'ஈனியத்,

போன்றவை காட்டும் பழக்க வழக்கங்கள் நமக்குப் புறம்பனவை. ஆக, இராமகாதை' ஓர் காப்பியடித்த கதை' என்ற ஆராய்ச்சியுண்டு! மேலே கண்ட நூல்களில் 'ரோமஸ்' 'ரீமுலஸ், அச்சிலீஸ், அகமம்னன் பிரியம் போன்ற நமது சாயல் உள்ள பெயர்கள் வருகின்றன. அங்கேயும் 'பாரிஸ்' என்பவன் 'ஹெலன்' என்பவளைத் தூக்கிச் சென்றதால் இராமாயணம் போன்றே பெரும் போர் மூளுகின்றது. ஆராய்ச்சியாளர்கள் இதற்கு விளக்கம் காண்பார்களாக.

சாதி, மதம், சமயம் எல்லாவற்றையும் கடந்த வள்ளலார் இராமனைப் பார்க்கும் பாங்கைக் காணுங்கவ்ள்.

''மம்றபழுக்கும் இலங்கை இராவணனைப்
பண்டோர்
வாளியினல் பணி கொண்ட மணியே,
வாய்மைத்
திறம் பழுக்கும் ஸ்ரீ ராம வள்ளலே நின்
திருவருளை யன்றி மற்ருேர் செயலிலேனே''

இவ்வண்ணமாகக் கம்ப நாட்டாழ்வார் இராம பரத்துவத்தை ''தின்னுவார் பிறரன்றி நீயே ஆனய்'' என்றவாறு ஒம்பும் நிகர்வும் இல்லாத கவிதாசந்நதத்தோடு நிலைநாட்டி விட்டார்!

1977 ஆம் ஆண்டு காரைக்குடி கம்பன் மணி மலரில், அமரர் கம்பன் அடிப்பொடி அவர்கள் "ஏதேனும் ஆகேனோ" என்று எழுதிய ஏக்கமுறு வினாக் கவிதைக்கு திரு. பி. சி. சீதாபதி எழுதியனுப்பிய மாற்றுரைக் கவிதை!

காப்பு

நிறைகுடம்தான் தழும்பாத நிலைகாட்டும் கணேசனவர்
குறைப்பட்டே ஏக்கமுறக் கூறுவதும் சரிதானோ?
முறைப்படவே சொல் செயல்கள் முரணின்றி வாழ்கின்றீர்;
அறைககம்பா! ஏதுமென்ன? அவர்'யாதும்' ஆவரன்றே!

பனையேடாய் ஆனதனால் பாருமையேப் புத்தகமாய்
நினைந்துகம்பன் புகழ்பரவி நிற்பதைநீர் உணரீரோ?
முனைமழுங்கா எழுத்தாணி முற்பிறப்பில் நீரதனால்
அனைவரகத் தெழுதுகின்றீர் அவனையென அறியீரோ?

எழிற்பீடம் ஆனதனை ஏற்றமுறக் கம்பனுக்கோர்
அழியாம ணிமண்டபம்நீர் அமைத்துளதே காட்டிநிற்கும்!
பழிக்கவிலாப் பொன்வட்டில் பார்த்தன்றோ போனகநூல்
ஒழிவின்றி இட்டுவிட்டான் உம்வழியாய் உலகருந்த!

பொற்குவளை ஆனதனால் புண்ணியனும் கம்பன்தான்
நற்பதங்கள் சேர்கவியை நயந்தூற்று கிறீரெமக்கே!
விற்பன்னன் ஆடையதாய் விளங்கியதா லன்றோநீர்
சொற்பொருள்கள் பற்பலவாய்ச் சொல்கின்றீர் மறைவகற்றி!

உத்தரியம் ஆகியதால் உத்தமநற் றமிழரெலாம்
நத்தியுமைப் பிடித்தவண்ணம் நடக்கின்றார் காவியத்தே!
வித்தகரே! கடை,முதலாம் விந்தையன்றோ மாலையதில்
அத்திறத்தால் கடைமணிநீர் ஆகிவிட்டீர் முதல்மணியாய்!

குடையானீர் அதனாலே குறிப்பாய்க்கம் பனில்விளங்கா
விடையொடுநேர்ப் பொருளுணரா வெம்மைதனில் குடையானீர்!
தடசித்தர் மெத்தெனவேத் திகழ்வதெத னாலென்றேன்;
படர்மெத்தை யாயமைந்த பாங்கதனா லென்றுணர்ந்தேன்!

அடைப்பையாய் ஆனதினால் அன்றேவும் அகத்தினிலே
அடைத்துவிட்டான் பல்பொருளும் அவனியெலாம் அடைந்திடவே!
உடைத்திடும்வன் பாக்குவெட்டி உமைப்போல்வார் யாரேயோ?
நடைபுரியாப் பாவெட்டி நயம்காட்டல் அதாலன்றோ!

வெற்றிலையாய் நின்றதனால் வளப்பசுமை யாய்க்கம்பன்
பொற்புடைக்கா வியச்சோலை பொலிவுவிளங்குதேயும் பால்!
கற்றவரும் மற்றவரும் கண்டுமகிழ் வெள்ளைமனம்
பெற்றதுநீர் சுண்ணும்பாய் உற்றதன்மை உணர்த்துமன்றே!

பெட்டிவண்டி யுமைக்கம்பன் பெட்டகமாய் ஒட்டிவிட்டான்
அட்டியின்றி எப்போல்வார் அதிலிவர்ந்து கவிபுகவே!
முட்டிடுமோர் மாடெனநீர் முன்னின்ற தனலன்றே!
திட்டமிட்டம் மாண்பன்சீர் தேரிழுக்கின் றீரிங்கே!

கதிநன்றும் கருங்கல்லாய்க் கிடத்ததனல் காரியங்கள்
விதிவழுவா தாற்றிடுமோர் விற்பன்ன ராகின்றீர்!
மிதியடியாய் ஆயநிலை மிளிருமந்த நினைவதுவே
புதியதொரு 'கம்பனடிப் பொடி'புனைபெ யரீந்ததுவே!

திருவலகாய்த் திகழ்ந்ததனல் திக்கெட்டும் தீந்தமிழ்சேர்
பெருமுற்றம் பெருக்கியவன் பெருமைகளைத் தெளிக்கின்றீர்!
ஒருபொருளா கவோவானீர்? ஒப்பற்ற கவிகம்பன்
திருவகம்சேர் பொருளெல்லாம் தேர்ந்திடின்யா துமானீரே!